87 A/L
விலங்கியல்
ஆசிரியர்:
நாகநாதன்
WEEKEND CLASSES
Monday Friday
8-30 a. m.
DAY CLASSES
Monday - Friday
10-30 a. m.
New Master
INSTITUTE
Navalar Road, Jaffna.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூ 2/-

83 A/L
வெப்பவியல்
[HEAT]
ஆசிரியர்:
திரு. வர்ணம்
ஆரம்பம்:
04-07-87 Sat 12-00 a. m.
New Master
INSTITUTE
Navalar Road, Jaffna.

மலே:- 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி 20 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 7 (04-07 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:-23

## பரீட்சைகளை பகிஷ்கரிக்கும் திட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜுலை 4

எதிர்வரும் ஆகஸ்டில் நடைபெறும் ஜீ. சி. ஈ. (உயர்தர) பரீட்சைக்கு தமிழ் மாணவர்கள் தோற்றுவது என்று நேற்று முடிவு செய்யப்பட்டது பரீட்சைகளைப் பகிஷ்கரிக்கும் திட்டம் கைவிடப்பட்டது

எனினும் மாணவர்கள் முன்வைத்த ஐந்து கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தைத் தொடருவது என்றும் முடிவு செய்யப்பட்டது

பரீட்சையைப் பகிஷ்கரிப்பது என முன்னர் எடுத்துக்கொண்ட முடிவை மீள்பரிசிலனை செய்வதற்காக நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பெற்றோர்கள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், அதிபர்கள், மாணவர் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மத்தியஸ்த ரீதியில் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

புலிகளின் சார்பில் திருவாளர்கள் திலீபன், யோகி, முரளி, காண்டீபன், நிரஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் ஆரம்பத்தில் பல வாதப்பிரதிவாதங்கள் சூடாக நடைபெற்றன.

பரீட்சையைப் பகிஷ்கரிக்க வேண்டும் என ஒரு சாராரும், பரீட்சைக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் 'பொடிபுத்தா'

யாழ்ப்பாணம், ஜுலை 4

முன்னாள் நிக்கவரெட்டிய எம்.பி. முதியான்சே தென்னக்கோன் (பொடி புத்தா) நேற்று யாழ் நகருக்குத் திடீரென வந்து சேர்ந்தார்.

இடைத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கும் தொகுதியில் ஒன்றான ஊர்காவற்றுறையில் போட்டியிடுவதற்கு தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவே அவர் யாழ் வந்ததாகக் கூறப்படுகிறது.

நேற்று நண்பகல் யாழ் வந்த அவர் முதலில் பத்திரிகைப் பணிமனை ஒன்றுக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.

பின்னர் அவர் யாழ் செயலகம் சென்றார்.

அங்கு தமது வேட்பு மனுவிற்கான கட்டுப் பணத்தை அவர் செலுத்துவதற்கு முயன்றார் என்றும்—

ஆனல் செயலக அதிகாரிகள் அதனை ஏற்க மறுத்துவிட்டனர் என்றும தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண செயலகத்தில் தற்போது கொடுப்பனவுகளாக பண நோட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்றும் —

ஆகவே கட்டுப் பணத்திற்குரிய காசை காசுக்கட்டளையாக அல்லது டிராவ்ட் ஆக கொடுக்கும்படியும் செயலக அதிகாரிகள் தெரிவித்தனராம்.

நகரில் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த அவரை நேற்று நண்பகலே இளைஞர் குழு ஒன்று விசாரணைக்கு அழைத்துச் சென்றதாகவும் செய்திகள் தெரிவித்தன. (உ-ள)

## கருத்துக் கலசம்

மயூரா

### மதவெறி வேண்டாம்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்பது முதுமொழி. ஆலயங்கள் தெய்வீகம் கமழும் சந்நிதிகள். அவை மக்களால் மகோன்னதமாக மதிக்கப்படுபவை.

ஆலயங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்கு அத்திவாரம் போன்றவை. இறைவன் மீது மக்கள் நம்பிக்கை வைக்கத் தூண்டுபவை. பக்தர்களின் மன அமைதிக்கு வழிசெய்யும் நிலையங்களாகவும் அவை விளங்குகின்றன.

ஆலயங்கள் அந்தந்தப் பிரதேச மக்களின் சமய, கலாசார சான்றுகளாகவும் கொள்ளப்படுபவை.

மதங்கள் பல. ஆனல் எல்லாவற்றின் குறிக்கோளும் ஒன்றே. அடுத்தவன் மதத்தையும் மதிக்கும் பழக்கம் எல்லோருக்கும் வரவேண்டும். மற்ற மதங்களும் வாழட்டும், வளரட்டும் என்ற சமரச சன்மார்க்க சிந்தனை தோன்ற வேண்டும்.

ஆனல் மனித சுபாவம் அதற்கு மாறாகவே உள்ளது. உலக நாடுகள் பலவற்றில் மதச் சண்டைகள் நடைபெறுகின்றன. அவற்றில் மனித உயிர்கள் வீணக மடிகின்றன. சமயத்தின் அடிப்படைக் கோட்பாட்டை மீறும் வகையில் சமயக் கலவரங்கள் நடப்பது மனிதப் பண்பாட்டுக்கே இழுக்குத் தருபவை.

ஸ்ரீலங்காவில் பௌத்த விகாரைகள்தான் அதிகம் இருக்க வேண்டும் என்று விரும்பும் தீவிரவாதிகளும் இருக்கிறார்கள். அதனை அவர்கள் அடிக்கடி பிரசித்தப்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆயுதப் படைகளால் அழிக்கப்படுகின்றன. புனிதமான அந்த இறைவன் இல்லங்களில் படையினர் குடிகொண்டு அவற்றை அசுசைப்படுத்துகின்றனர்.

இந்த நடவடிக்கைகளுக்கும் ஸ்ரீலங்காவில் விகாரைகள் தான் அதிகம் இருக்க வேண்டும் என்ற தீவிரவாதத்துக்கும் நிச்சயம் தொடர்பு இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல ஆலயங்கள், தேவாலயங்களில் திருவிழாக்கள் நடக்கவில்லை. இராணுவத் தாக்குதல் காரணமாக மற்றும் பல ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் வருடாந்த உற்சவங்கள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. மிகப் பெரும் எண்ணிக்கையான ஆலயங்களில் நித்திய பூசைகளே இல்லை. இன்னும் பல ஆலயங்களுக்குச் சென்று வழிபட மக்கள் இல்லை. அவர்கள் வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்துவிட்டார்கள். அல்லது அகதி

( 8ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

04-07-1987
சனிக்கிழமை

சுபநேரம்:-
2.57 முதல் 4.27 வரை
ராகுகாலம்:-
8.57 முதல் 10 27வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி முன்னிரவு 9.29 வரை

## பாடசாலைகள் இடம் மாற்றம்

அச்சுவேலி, ஜுலை 4

கோப்பாய்கல்விவட்டாரத்திலுள்ளஇடைக்காடு மகாவித்தியாலயம், வளலாய் அமெரிக்கன்மிஷன் வித்தியாலயம் கதிரிப்பாய் பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், பத்தமேனி விபசி வித்தியாலயம் ஆகிய நான்கும் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன.

இடைக்காடு மகாவித்தியாலயம் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரிக்கும்—

ஏனைய மூன்றும் நீர்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி சி.சி த.க. பாடசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளன. (உ-11)

## படையினர் முகாமிட்டிருக்கும் பாடசாலையைப் பார்க்கச் சென்ற அதிபர் மீது சூடு

காங்கேசன்துறை, ஜுலை 4

வீமன்காமம் மகா வித்தியாலய அதிபரும், பழை, வீமன்காமம் பிரசைகள் குழுவின் முக்கிய உறுப்பினருமான திரு. மு. சிவராசா நேற்று மாவிட்டபுரத்தில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார்.

அவர் தற்போது ஆபத்தான கட்டத்தில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருக்கிறார்.

இராணுவத்தினரைச் சந்தித்து அவர்களின் அனுமதி பெற்று இராணுவம் நிலை கொண்டுள்ள மேற்படி வித்தியாலயத்துக்குச் சென்று முக்கிய தஸ்தாவேஜுகளை எடுக்கும் நோக்குடன் அங்கு சென்றதாகக் கூறப்படுகிறது.

மாவிட்டபுரம் அர

(8ஆம் பக்கம் பார்க்க)

### இன்றைய சஞ்சீவியில் - - -

★ டிச.19 யோசனையும் இந்தியாவும் (உள்ளும் புறமும்)
★ இந்திய—ரஷ்ய உடன்பாடு
★ வடமராட்சியில் அரச ஊழிக்கூத்து (சிறப்புக் கட்டுரை)
★ தமிழில் புதிதாக புதுமையாக இன்னும் செய்ய விரும்புகின்றேன் —வரதர்
★ அன்னதானம் (சிறுகதை)
★ சதாசிவம் கொலை வழக்கு புதிய நோக்கில்
★ சோலில் ஒலிம்பிக்
★ தென்கொரிய அரசு பணிந்தது (உலக உலா)

## ஈழத் தமிழ் அகதிகளுக்கு வைத்திய உதவி

சென்னை, ஜுலை 3

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் 30 பேர் கொண்ட வைத்திய அதிகாரிகள் ஐந்து தினங்களாக மண்டபம் பகுதிகளில் தங்கியிருந்து சுமார் 5 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வைத்திய உதவிகள் வழங்கினர்.

மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை இப்படி வைத்திய முகாம் நடத்த தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. (உ-எ)

## பால்மா விளம்பரங்களுக்கு தடை விதிப்பு

கொழும்பு, ஜுலை 4

குழந்தைகளுடன் காண்பிக்கப்படும் பால் மா உணவு விளம்பரங்களை ரூபவாஹினியில் காண்பிப்பதை நிறுத்தும்படி ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் உத்தரவிட்டிருக்கிறார்.

விலை உயர்ந்த பால்மா வகைகளை வாங்கி தங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கமுடியாத நிலையில் உள்ள பெற்றோர்களுக்கு ஏற்படக்கூடிய வேதனையைத் தவிர்க்குமுகமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக ராஜாங்க அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## இராஜினிமாவை வாபஸ் பெற மறுப்பு

கொழும்பு, ஜுலை 4

இராஜினாமக் கடிதங்களை வாபஸ் பெறுவதற்கு அமைச்சர் வின்சன்ட் பெரேரா மறுத்து விட்டார். (உ-எ)

## வடமராட்சியில் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஜுலை 4

வடமராட்சிப் பகுதியில் இந்திய நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்காக இந்திய, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நேற்று வடமராட்சி சென்றுள்ளது.

இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இருவர் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவர் யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இருவர் இக்குழுவில் அடங்கியுள்ளனர்.

குழுவினர் வடமராட்சியில் ஒரு வாரம் தங்கியிருப்பர் என்று செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-ள)

## துறைமுகத்தினுள் பொறுக்கா கப்பல்

### இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 4

பொறுக்கா-2 கப்பல் நேற்றுக் காலை காங்கேசன்துறை துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதிக்கப்பட்டது.

பிற்பகல் அளவில் மருந்து மற்றும் உணவுப் பொருள்கள் கப்பலில் இருந்து இறக்கும் வேலைகள் ஆரம்பமாகின.

இந்திய நிவாரண உதவிகளுடன் வந்த இக்கப்பல் கடந்த நான்கு தினங்களுக்கு மேலாக காங்கேசன் துறைமுகத்துக்கு வெளியேதான் நிறுத்தப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்காக் கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டதால்,

(8-ஆம் பக்கம் பார்க்க)

## நாதஸ்வர இசையுடன் இந்திய விழா ஆரம்பம்

### எம். எஸ். எஸ். சிவதோத்திரம்

மாஸ்கோ, ஜுலை 4

நாதஸ்வர இசை ஒலிக்க, இசைப்பேரரசி எம். எஸ். சுப்புலக்ஷ்மி இறை வணக்கம் பாட, கிரெம்ளின் மாளிகையில் இந்திய விழாவை பிரதமர் ராஜீவ் காந்தியும் சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ்வும் நேற்று கூட்டாக அங்குரார்ப்பணஞ் செய்து வைத்தனர்.

விழா இந்திய மரபுக்கு இணங்க பூரண கும்பம் வைத்து ஆரம்பிக்கப்பட்டது. அப்போது மங்கள இசையான நாதஸ்வரம் இசைக்கப்பட்டது.

திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி 'நமசிவாய' தோத்திரம் பாடினர்.

அதனைத் தொடர்ந்து சந்திரலேகா குழுவினரின் நடன நிகழ்ச்சி இடம்பெற்றது.

வெளிநாட்டு விழா ஒன்றுக்கு கிரெம்ளின் மாளிகையை ரஷ்ய அரசு

(8ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ்--கோர்பச்சேவ் 2 ஆம் கட்டப் பேச்சு

மாஸ்கோ, ஜுலை 4

பிரதமர் காந்தி, சோவியத் தலைவர் கோர்பச்சேவ் ஆகியவர்களுக்கு இடையேயான இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நேற்று வெள்ளிக்கிழமையன்று இடம்பெற்றன.

கிரெம்ளினில் நடந்த இப்பேச்சுக்களின்போது, இந்தியாவின் அயல்புற நாடுகளின் நிலைமைபற்றி சோவியத் தலைவரும் பிரதமர் காந்தியும் பரிசிலனை செய்தனர். (உ-எ)

## இந்தியாவைப் பலவீனப்படுத்த வெளிநாட்டுச் சக்திகள் முயற்சி

### சோவியத் தலைவர் ஆழ்ந்த கவலை

மாஸ்கோ, ஜுலை 4

உள்ளே இருந்தும் வெளியே இருந்தும் இந்தியாவைப் பலவீனப்படுத்த சில வெளிநாட்டு அரசியல் சக்திகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளமை குறித்து சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் ஆழ்ந்த கவலை வெளியிட்டார்.

பிரதமர் ராஜீவ்காந்திக்கு கிரெம்ளின் மாளிகையில் நேற்று அளித்த விருந்துபசாரத்தில் பேசுகையிலேயே திரு. கோர்பச்சேவ் இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் சொன்னதாவது:-

பெரிய நவீனயுக வல்லரசாக இந்தியா உலகில் வளர்ந்து வருகின்றது.

இதைப் பொறுக்க முடியாத உலகில் உள்ள சில அரசியல் சக்திகள் இந்தியா மீது நிர்ப்பந்தம் ஏற்படுத்த எந்த வழிகளையும் கையாளத் தயாராகியுள்ளன.

ரஷ்ய-இந்திய நட்புறவும் அச்சக்திகளுக்கு வெறுப்பையே ஏற்படுத்தியுள்ளன.

#### இராணுவ மயப்படுத்தல்

இராணுவ மயப்படுத்தல், [illegible] நடவடிக்கையில் ஈடுபடுதல், மோதல்கள், பிராந்தியப் பிரச்சினைகளை உருவாக்குதல் ஆகியவற்றை இந்தியாவுக்கு எதிராக உள் இருந்தும் வெளியே இருந்தும் செயற்படுவதில் இச்சக்திகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இந்தியாவைப் பலவீனப்படுத்துவதே இச் சக்திகளின் நோக்கம்.


பலப்பட்டு வரும் இந்திய - சோவியத் உறவு இச்சக்திகளுக்கு 'அலெர்ஜியாக' அமைந்துள்ளது.

-இப்படி திரு. கோர்பச்சேவ் தெரிவித்தார்.

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் திரு. கோர்பச்சேவ் சொன்னதாவது:

இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினைகள், வெளிச்சக்திகளினுல்

(8ஆம் பக்கம் பார்க்க)




ஓ.லி:- "ஒப்பரேஷன் லிபரேஷன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்து கொழும்பில்; கப்பல் காங்கேசனில்

# தரை நிலை - யோசனை நிலை ஒரே மட்டம் வருமா?

'பொறுக்கா' வுக்கு (''Bhouruka'') மேல் அனுப்பினால் பொறுக்காது.

கொழும்பு இப்படிக் கூறிவிட்டது.

யாழ் மக்கள் வேண்டாம் என்று கூறும் வரை அனுப்புவோம்—

புதுடில்லி இப்படி வலியுறுத்தியுள்ளது.

தூதர் மட்டத்தில் பேச்சுக்கள் தொடர்கின்றன.

'கப்பல் ஒரு தொடர் கதை', ஒரு சமூக நாவல் அல்ல; அது ஒரு மர்மநாவல் — இப்படி கொழும்பு வட்டாரங்கள் கருதத் தொடங்கி விட்டனவாம்.

'கப்பல் ஒரு தொடர் கதையின்' முதலாவது அத்தியாயமே சரியாகப் படித்து முடிக்கப்படாத நிலையில் —

'பந்து' தற்போது கொழும்பில் என்று கூறிவிட்டு ராஜீவ் கிரெம்ளின் சென்று விட்டார்.

இந்த நிலையில் — இந்தியத் தூதர் டிக்ஸிற் கொழும்பு திரும்பி விட்டார்.

அவரைப் பின் தொடர்ந்து ஸ்ரீலங்காத் தூதர் பெர்னாட்டும் வந்து விட்டார்.

**பந்து தேடப்படுகிறது**

ராஜீவ் அடித்துவிட்ட 'பந்தை' தேடும் வேலை கொழும்பில் ஆரம்பமாகி விட்டது.

மாஸ்கோ செல்லும் முன்னர் ராஜீவ் செய்தி ஒன்றை தர்மிஷ்டருக்கு அனுப்பி வைத்தார்.

அதுவும் டிக்ஸிற்றினால் தர்மிஷ்டரிடம் கையளிக்கப்பட்டு விட்டது.

அடிக்கடி 'பந்து' 'அங்கும் இங்கும் எங்கும்' என்று பேசப்பட்டு வந்தது.

'பந்து' பேச்சை வெறும் வாய்ப்பந்தல் பேச்சாகவும் மக்கள் கணித்தும் வந்தனர்.

இம்முறை ராஜீவ் 'பந்து கொழும்பில்' என்று சொன்னதற்கு அர்த்தம் உண்டு— இப்படி அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

முதலில் படகு வந்தது. பின்னர் விமானம் வந்தது. இப்பொழுது கப்பல் வரத் தொடங்கி இருக்கிறது.

இவற்றின் பின்னணியில் 'பந்தும் இப்போது கொழும்பு வந்துள்ளது என்று முதல் தடவை



ஜே. ஆர்.

யாக ராஜீவ் கூறியிருக்கின்றார்.

அர்த்தமுள்ள செயல்களில் ஈடுபட்ட பின்னர் கூறப்பட்டதால் 'அர்த்தமுள்ள பந்து' தான் கொழும்புக்கு அடிக்கப்பட்டுள்ளது என்றும் எண்ண இடமுண்டு அல்லவா!

அது மட்டும் அல்ல.

மாஸ்கோ பயணத்துக்கு முன்னோடியான பேட்டியில் ராஜீவ் இன்னொன்றையும் சொல்லியிருக்கின்றார்.

அக்கூற்றுத்தான் கொழும்பு அரசு வட்டாரங்களைக் குடைந்து கொண்டிருக்கின்றது.

அப்படி என்ன கூறிவிட்டார்?

'இராணுவ நடவடிக்கைகளினால் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் பணியைத் தொடர முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டு விட்டது.

ஆகவே ஸ்ரீலங்காவிடம் இருந்து புதிய முயற்சிகளை இந்தியா எதிர்பார்க்கின்றது'—

இதுதான் கொழும்பைக் குழம்ப வைத்துள்ள ராஜீவின் கூற்று.

**கூற்று கூற்றுவனாகுமா?**

இதைக் கூற்றுவனாக வந்துள்ள கூற்றாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

கொழும்புப் பத்திரிகை 'ஐலண்ட்' ஒரு படி மேலே போய் தனது ஆசிரியர் தலையங்கத்தில் டிசம்பர் 19 யோசனைகளை இந்தியா கைவிட்டு விட்டதை இக்கூற்று எடுத்துக் காட்டுகின்றது' என்றும் எழுதியுள்ளது.

'ஐலண்ட்' அரசுக்கு ஆலோசனையும் கூறியுள்ளது.

டிசம்பர் 19 யோசனைக்கு மேலே இம்மியும் விட்டுக் கொடுக்கக் கூடாது-இதுவே 'ஐலண்டி'ன் ஆலோசனை.

நாடு 'ஐலண்டா'கத் தொடர்ந்து விளங்குவதை விரும்பாதமாதிரி கொழும்பு ஆங்கில நாளிதழ்கள் நடந்து கொள்கின்றன.

டிசம்பர் 19 யோசனைகள் இன்னும் செல்லுபடியாகுமா? செல்லுபடியாகாதா?

ராஜீவின் 'புதிய முயற்சிகளை ஸ்ரீலங்காவிடம் இருந்து இந்தியா எதிர்பார்க்கின்றது'— என்ற கூற்று இக்கேள்விகளை எழுப்பியுள்ளது

டிசம்பர் 19 இல் இருந்த தரை நிலைப்பாடு (Ground Situation) வேறு; அதற்குப் பின்னர் ஏற்பட்ட நிலைப்பாடு வேறு.

தரை நிலைப்பாட்டுக்கும் யோசனை நிலைப்பாட்டுக்கும் முடிச்சுப் போட்டுப் பார்க்கும் அரசியல் நிலைப்பாடே

## டிசம்பர் 19 நிலைக்கு அதிகமாக எதிர்பார்க்கிறது இந்தியா!

உண்மையே.

**வியாக்கியானம்**

டிசம்பர் 19 யோசனை பற்றி இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளின் நிலைப்பாடு பற்றி கூட்டணித்தலைவர் எம். சிவாவும் வியாக்கியானம் கொடுத்திருக்கின்றார்.

டிசம்பர் 19 யோசனையை 'ஆரம்பக்கட்டமும் அடிப்படையான சில கருத்துக்களும்' என்றே இந்தியா கருதுகின்றது.

கொழும்பு அரசோ, 'டிசம்பர் 19 யோசனை பேச்சுக்களுக்கான அடிப்படை'— என்றே கருதி வருகின்றது.

தமிழர் பகுதிகளில் இன்று ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

இராணுவத் தாக்குதல்களைத் தொடர்ந்து தமிழர்களின் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள புதிய தரைநிலைப்பாடு தமிழர்களுக்குச் சாதகமானதல்ல; பாதகமானதொன்று.

அப்பாதகமான நிலைப்பாட்டை மறக்க வைக்கக்கூடியதான புதிய முயற்சிகளைத் தான் ராஜீவ் பேட்டியில் சொன்னாரா? அல்லது—

டிசம்பர் 19 யோசனைகளைத் தான் பிடித்துக் கொண்டிருக்கப் போகின்றீர்கள் என்றால் டிசம்பர் 19 இல் இருந்த தரை நிலைப்பாட்டுக்குத் திரும்பிச் செல்வீர்களா? என்பதைத்தான் மறைமுகமாகக் கூறியுள்ளாரா?

இக்கேள்விகளும் அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ளன.

டிசம்பர் 19இல் இருந்த தரை நிலைப்பாட்டுக்கு ஸ்ரீலங்கா அரசு திரும்பிச் செல்லப்போவதும் இல்லை:

டிசம்பர் 19 யோசனைகளுக்கு மேலாக புதிய யோசனைகளை சமர்ப்பிக்கப்போவதும் இல்லை.

இப்படி கொழும்பு அரசியல் அவதானிகள் கருத்து வெளியிடுகின்றனர்.

இந்தநிலையில் —

**மாற்று நடவடிக்கைகள் என்ன?**

புதிய முயற்சிகளை கொழும்பிடம் இருந்து எதிர்பார்ப்பதாக அறிவித்த அதே நேரத்தில்,

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கப்படவேண்டிய மாற்று நடவடிக்கைகளை இந்தியா தீர்மானித்து விட்டது என்றும் வேறு ராஜீவ் கூறிவிட்டார்.

அந்த மாற்று நடவடிக்கைகள் என்ன என்ப



ராஜீவ்

தைக் கண்டுபிடிக்க கொழும்பு மண்டையைப்போட்டு உடைக்கின்றது.

மாற்று நடவடிக்கைகள் எம்மை மாட்டிவிடும் நடவடிக்கைகளாக மாறாத மாதிரி நாம் நடந்து கொள்ள வேண்டும் — இப்படி நடுநிலைமைப் போக்கை விரும்புபவர்கள். அரசுக்குக் கூறி வருகின்றனராம்.

(வன்செயல்) தொடரும் என்றால் (பேச்சு) தொடராது; (வன்செயல்) தொடராது என்றால் (பேச்சு) தொடரும்— என்று இந்தியா ஜனவரியில் கூறியதை உதாசினம் செய்தது;

மார்ச்சில் இந்தியா அனுப்பிய 'டிமாஷ்' நோட்டீஸை 'தமாஷ்' ஆக எடுத்துக் கொண்டது.

இவற்றின் பலன்தான் டிசம்பர் 19 யோசனைக்கும் மேலான புதிய முயற்சிகள் வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தி விட்டன.—

இப்படி 'பஸ்ஸைத் தவறவிட்டு' புலம்புவதும் கொழும்பு வட்டாரங்களில் இடம் பெறுகின்றதாம்.

★ கப்பல் காங்கேசன்துறையில்—

★ பந்து கொழும்பில் இப்படிக் கூறிவிட்டு கிரெம்ளின் சென்ற ராஜீவ், இந்தியாவின் அயல் புற நிலைமைபற்றி வியாழன் இரவு சோவியத் தலைவர் கோர்பச்சேவுடன் ஆராய்ந்ததா

**உள்ளும் புறமும்**

**குறுமுனி**

கச்செய்தி வந்துள்ளது. ராஜீவ் புதுடில்லி திரும்பிய பின்னர்தான் மீதி தெரியவரும்! ★

# குழம்பியிருக்கும் கொழும்பு அரசியல்; சரியான நேரமும் சரியான தகவலும்

படகு, விமானம், கப்பல், பந்து—

இதன் மத்தியில் கொழும்பு அரசியல் எப்படி உள்ளது?

இது பற்றி சிறிது சிந்தித்துப் பார்ப்போமா?

'ஒப்பரேஷன் லிபரேஷன்' முடிந்து விட்டது என்று கூறிய கையோடு முதலில் பாகிஸ்தான் சென்ற அமைச்சர் லலித் வியன்னா, லண்டன், அமெரிக்கா சென்ற பின்னர் வியாழன் காலை கொழும்பு வந்து சேர்ந்தார்.

சரியான நேரத்தில் சரியான தகவலை வெளிநாட்டாருக்குத் தெரிவித்தேன்— இப்படி வந்திறங்கியதும் சொன்னார் அமைச்சர்!

இரண்டாகப் பிரிந்து வாழும் ஜேர்மனியின் சஞ்சிகை ஒன்றுக்கு அமைச்சர் பேட்டி அளித்தார்.

'ஸ்ரீலங்காவை ஆக்கிரமிக்கும் முன்னர் சிங்களவர் மத்தியில் வாழும் தமிழர் பற்றி ஆக்கிரமிப்பாளர் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படி ஆக்கிரமிப்பு நடைபெறும்போது அந்தத் தமிழருக்கு பாதுகாப்பு வழங்குவது பெரிய பிரச்சினையாக இருக்கும்'— இப்படி அமைச்சர் லலித் பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இது தானா 'சரியான நேரத்தில் தெரிவித்த சரியான தகவல்?

இப்படி சமாதான விரும்பிகள் கேட்கின்றனர்.

1984 இல் தர்மிஷ்டரும் இப்படிச் சொன்னவர்தான்.

'இன்டியா டுடே' பத்திரிகைக்கு தர்மிஷ்டர் அப்போது ஒரு பேட்டி அளித்தார்.

'இந்தியா இலங்கையை ஆக்கிரமித்தால் அது இலங்கைத் தமிழரின் முடிவாக இருக்கும் — இப்படி தர்மிஷ்டர் அப்பேட்டியில் தெரிவித்திருந்தார்.

படகு, விமானம். கப்பல் வரும் முன்னர் தர்மிஷ்டர் சொன்ன கூற்றை—

பாதுகாப்பு அமைச்சர் அவை வந்த பின்னர் சொல்லியிருக்கின்றார். அவ்வளவுதான் வித்தியாசம்.

**அமைச்சர் ஹமீத்**

சார்க் மாநாட்டுக்குச் சென்ற அமைச்சர் ஹமீத், பிரதமர்ராஜீவ், அமைச்சர் திவாரி, இணை அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரையும் சந்தித்தார்.

கொழும்பு திரும்பியதும் தான் விரும்பிய பத்திரிகையாளர்களை அழைத்து பேட்டி அளித்தார்.

'பேச்சுக்களுக்கு தீவிரவாதிகளை அழைத்து வருவதாக இந்தியா உறுதியளித்துள்ளது''— இப்படி பேட்டியில் சொன்னார் அமைச்சர்.

பிரச்சினைக்குரிய தீர்வு காண இந்தியாவின் பங்களிப்பைத்தான் நாடுகின்றோம்; மத்தியஸ்தத்தை அல்ல'— என்றும் அமைச்சர் சொன்னார்.

புதிய முயற்சிகளை கொழும்பிடம் இருந்து எதிர்பார்ப்பதாகக் கூறி 'பந்தை' அடித்த ராஜீவின் பேட்டிக்குப் பின்னர் அமைச்சர் ஹமீது ஒன்றுமே பேசாமல் இருக்கிறார்.

சார்க் மாநாட்டுக்கு போய் வந்து தெரிவித்தது சாக்குப்போக்காக முடிந்து விட்டதே— என்று அரசியல் வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

**பிரதமர் பிரேமதாஸ**

'கிரிவிகாரை'யில் சொன்னேன்; 'ஹரியானா'வில் பதில்கிடைத்தது— இப்படி கதிர்காமத்தில் நின்று குரல் கொடுத்து இருக்கிறார் பிரதமர் பிரேமதாஸ.

கதிர்காமக் கந்தன் முன்னால் நின்றும் இந்திய எதிர்ப்பு உணர்ச்சி போகவில்லை.

'ஹரியானா'வில் கொடுத்த பதில் இந்திய விமானம் ஸ்ரீலங்காவுக்குள் அத்துமீறியதை எதிர்த்துக் கொடுக்கப்பட்டதா?

ஹரியானா விவசாயிகள் அரசிடம் பெற்ற சுமார் 480 கோடிரூபா (இந்தியப் பணம்) கடனைத் தள்ளுபடி செய்வதாக லோக்தள் வெளியிட்ட அறிவிப்புக்குக் கிடைத்த வெற்றியா?

இனப்பிரச்சினை விஷயத்தில் ஸ்ரீலங்கா அரசு மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்திய லோக்தள் கட்சிதான் ஹரியானாவில் வென்றிருக்கிறது என்பது தெரியவில்லையா?

இதைப் புரிந்து கொள்ளமுடியாத நிலையிலா வீடு கட்டிச் செல்வாக்குத்தேடி ஜனாதிபதி மாளிகையைப் பிடிக்க முயலும் பிரதமர் இருக்கின்றார்.

அப்படி இருக்கமாட்டார் என்றே கொழும்பு வட்டாரங்கள் இன்னும் நம்புகின்றன.

யாழ் குடாவுக்கு உணவு அனுப்புவது இந்தியா, ஸ்ரீலங்காவுடன் நட்பு பாராட்டும் செயலாகத் தெரியவில்லை என்றும் பிரதமர் கதிர்காமத்தில் வைத்துக் கூறியிருக்கிறார்.

வடக்கின்மீது பொருளாதார முற்றுகை போட்டு தமிழருடன் 'நட்பு' பாராட்டியது போன்று நடந்துகொள்ளவேண்டும் என்று தான் பிரதமர் விரும்புகின்றாரா? ★

**பிரயாண ஒழுங்குகள்**

★ **குவைத்** ★

எம்மிடம் பாஸ்போட் கொடுத்தவர்கள் எல்லோரும் தொடர்பு கொள்ளவும்.

குவைத் Harbourக்கு Agreement செய்தவர்கள் யாவரும் பிரயாணம் மேற்கொள்ள இருப்பதால் உடனே தொடர்பு கொள்ளவும்.

LAND SURVEYORS முற்பணம் கட்டியவர்கள் மட்டும் வந்து சந்திக்கவும்.

பின்வரும் பதவிகட்கும் சொற்ப இடமிருக்கின்றதால் விருப்பமுள்ளவர்கள் வரவும்.

1. Draftsman — 3 இடங்கள் உள்ளன
2. Mechanics — 5 வருட அனுபவம்
3. Auto Electrician — 5 வருட அனுபவம்
4. Heavy Duty Drivers 5 வருட அனுபவம்
5. H. E. Operators 5 Years
6. Labourers
7. Steel Workers 5 Years

குவைத் நாட்டிற்கு Cleaning Labourer தேவையாக இருக்கிறது. உடன் வரவும்.

விபரங்கட்கு:

V. P Balasubramaniam
(V. P. BALA)
Kondavil West,
School Lane,
KONDAVIL.

**Head Office:**

**Construction & Development Company Ltd.**

37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.

இவ்வாரத்து

# ராஜீவ்-கோர்பச்சேவ் சந்திப்பும் ரஷ்ய - இந்திய உடன்பாடும்

ருஷ்ய நாட்டில் இந்தியத் திருவிழாவில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமர் ராஜீவ் மாஸ்கோ பயணமாகி உள்ளார்.

கிரெம்ளின் நகரில் இத்தகைய விழாவை ஒழுங்கு செய்ய அனுமதி பெற்றுள்ள ஓரேயொரு நாடு இந்தியாவாகும்.

பதினாறுகோடி ரூபா செலவில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்விழாவில் இந்திய நாட்டுப் பாரம்பரிய கலைகள் அரங்கேற்றப்பட்டு உள்ளன.

இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் ருஷ்யா இத்தகையதொரு விழாவை இந்தியாவில் நடத்த உள்ளது.

புதிய உடன்பாட்டில் அறிவியல் தொழில்நுட்ப துறைகளில் உதவி வழங்குவதும் இடம் பெறும்.

இந்திய நாட்டைச் சூழ பல அச்சுறுத்தல்கள் நிலவும் சூழ்நிலையில் ராஜீவ் கோர்பச்சேவ் சந்திப்பு மாஸ்கோவில் நிகழ்கிறது. இச்சந்திப்பில் உலக விவகாரங்கள் இப்பிராந்தியப் பிரச்சினைகள் ஆகியன விவாதிக்கப்பட்டு உள்ளன.

சாத்தாக உள்ளது. ருஷ்ய - இந்திய உடன்பாடு முதன் முதல் கைச்சாத்தாகி பதினாறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

**ஒப்பந்தப் பின்னணி**

1971 ஆம் ஆண்டு இந்திய உபகண்டத்தில் எங்



கோர்பச்சேவ்

கும் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

அன்றைய கிழக்கு பாகிஸ்தானையும் மேற்குப் பாகிஸ்தானையும் இந்திய நிலப்பரப்புப் பிரித்தது. கிழக்கு [illegible] சுயாட்சி கோரி ஆயுத [illegible] டத்தை ஆரம்பித்தனர். இதுகண்ட ஆட்சியாளர்

முறையில் ஈடுபட்டனர். இவ்வரசின் வன்முறை காரணமாகப் பெருந்தொகையான மக்கள் அகதிகளாக இந்திய நாட்டுக்கு விரைந்தனர்.

இக்கால கட்டத்தில் அன்னை இந்திரா தலைமையில் இயங்கிய இந்திய அரசு மிகவும் சிக்கலான தீவிர முடிவினை எடுத்தது. கிழக்கு பாகிஸ்தான் மக்களின் விடிவுக்கு வழி சமைக்க எடுத்த நடவடிக்கையே அம்முடிவு. அதன் பயனாக பங்களாதேஷ் சுதந்திர நாடு உருவாகியது.

இவ்வாறு இந்திய அரசு முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளையிலே அமெரிக்கா தனது ஏழாவது படையினை வங்காள விரிகுடாவுக்கு அனுப்பி வைத்தது. இந்திய நாட்டில் இராணுவத்தலையீடு செய்வது அமெரிக்காவின் நோக்கமாக இருந்தது. இத்தகவல் அண்மையில் ஈரான்நாட்டில்கிடைத்த சில ஆவணங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. ஆனால் அத்திட்டம் நிறைவேறவில்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையில் உருவானதே இந்திய - ரஷ்ய உடன்

பதினாறு ஆண்டுகள் ஓடி விட்டன.

எனினும் இந்திய - ரஷ்ய உடன்பாடு ஒரு குறுகியகால நோக்குடையது அன்று. அது இரு நாடுகளுக்கும் இடையே நிலவிய நீண்டகால உறவில் மலர்ந்தது.

இருப்பினும் இந்தியா தனது அணிசேராக் கொள்கையில் உறுதியாக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**லெனின் கூற்று**

எமது சகோதரத்துவ, நட்புறவுக் கரத்தினை இந்தியருக்கும் ஏனைய கீழைத்தேய நாடுகளுக்கும் நீட்டுகிறோம்—''

**- வி.வி.எஸ். -**

என்ற லெனினது கூற்று இங்கு நினைவுக்கு வருகிறது.

பதினாறு ஆண்டுகாலம் உருண்டோடிய போதிலும் இன்று உலக அரசியல் வானில் அன்றைய சூழ்நிலை சுவாத்தியம் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

இதனால் இச்சந்திப்பு

விரைவில் வெளிவரும்!

## இந்து நாகரிகம்

"இந்து நாகரிகம்" என்னும் சஞ்சிகை இதழ் இதழாக, ஒன்றன்பின் ஒன்றாக, மலர்ந்து வெளிவரும். பல்கலைக்கழகப் பாட விதானத்தை அடிப்படையாகக் கொண்டு விடயங்கள் அமையும்.

ஆசிரியர்:
க. சி. குலரத்தினம்,
கந்தமடம்,
யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் அரச ஊழிக்கூத்து!

# மக்கள் வாழ்ந்த மண் மயான பூமி!!

திங்கட்கிழமை மதியம் பன்னிரண்டு மணி. செஞ்சிலுவைச் சங்க கொடிகள் பறக்கவிடப்பட்ட வாகனம் ஒன்று இந்திய, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளை ஏற்றிக் கொண்டு வடமராட்சிக்குச் செல்லத் தயாரானது. அதில் உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளும் பத்திரிகையாளர்களான நாமும் கூடச் சென்றோம்.

செஞ்சிலுவைச் சங்க கொடிகளைக் கண்ட மக்கள் வீதி எங்கும் நின்று பஸ்சுக்குள் இருந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்குக் கைகளை அசைத்துத் தமது வரவேற்பினைத் தெரிவித்துக் கொண்டனர்.

கல்வியங்காட்டு பெற்றோல் நிலயத்தில் எமது வாகனம் பெற்றோல் நிரப்புவதற்காக நிறுத்தப்படுகிறது.

**வாகனம் புறப்படுகிறது**

பிற்பகல் 1.00 மணி அளவில் புத்தூர் சந்தியில் எமது வாகன வருகையை எதிர்பார்த்து யாழ் அரசாங்க அதிபரும் ஏனைய உயர் அதிகாரிகளும் காத்து நின்றனர்.

வாகனத்தைக் கண்டதும் "நான் முன்னால் காரில், போகிறேன் நீங்கள் எனக்குப் பின்னால் வாருங்கள்" எனக் கூறிய அரச அதிபர் தமது காரில் முன்னால் சென்று சிருடையில் இரண்டு சிப்பாய்கள் வீதியின் குறுக்கே ஓடி வந்தனர்.

எமது வாகனத்தை சிப்பாய்கள் நோட்டமிட்டனர்.

வாகனம் திடீரென நிறுத்தப்பட்டது.

மறுபுறத்தே வேறு வாகனத்தில்வந்த பயணிகளைச் சிப்பாய்கள் சோதனையிடுகின்றனர்.

குட்டி ஆனையிறவு போல் இப்பகுதி காட்சி அளித்தது.

பிரயாணிகள் திறந்த பைகளுடன் "ஐயா எங்களிடம் ஒன்றும் இல்லை நாங்கள் அப்பாவிகள் எங்களைப் போகவிடுங்கள்" என்று கேட்பது போல் இராணுவ சோதனைக்காக காத்து நிற்கின்றனர்.

செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் இருந்து யாரும் இறக்கப் படவில்லை.

அரச அதிகாரி ஒருவர் இராணுவ அதிகாரியுடன் கதைத்து வந்ததையடுத்து வாகனங்கள் இரண்டும் வடமராட்சிக்குள் தொடர்ந்து செல்ல அனுமதி வழங்கப்பட்டன.

இரண்டு மணியளவில் எமது வாகனங்கள் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் இருக்கும் மாலி சந்தியைச் சென்றடைந்தன.

அங்கு தரித்து நின்ற சில நிமிடங்களில் நாம் எமது வாகனத்தை விட்டிறங்கி அருகே இருந்த கடை ஒன்றில் கரவெட்டி நிலைமை பற்றி விசாரித்துக் கொண்டிருந்தோம்.





"ஒப்பறேஷன் லிபறேஷ"ன் போது விமானக் குண்டு வீச்சுக்கு இலக்கான வல்வெட்டித்துறை நவீனசந்தையை முதற் படத்திலும்—

குண்டு வீச்சால் சேதமடைந்த வல்வை பஸ்நிலயத்திலுள்ள ஞாபகார்த்த மண்டபம் ஒன்றை இரண்டாவது படத்திலும் காணலாம்.

கொண்டிருந்தார். நாம் அதனைத் தொடர்ந்து கொண்டிருந்தோம்.

சாவகச்சேரி, கொடிகாமம் தாண்டி முள்ளிப் பகுதியை செஞ்சிலுவை வாகனம் அண்மித்த பொழுது நேரம் இரண்டு மணி இருக்கும்.

வீதியில் குறுக்கே பனை மரங்கள் போடப்பட்டிருந்தன.

கையில் ஆயுதங்களுடன் போராளிகள் நிற்கிறார்கள்.

எமது வாகனம் தொடர்ந்து சென்று கொண்டிருந்தது.

திடீரென இராணுவச்

திடீரென கடைக்காரர் "உஷ்! சத்தம் போடாதீர்கள் அவங்கள் வாருங்கள்" என்றார் திரும்பிப்பார்த்த எமக்கு நெஞ்சு பகீரென்றது. இதயம் நின்றுவிடுமாப் போல் படபடத்தது.

இராணுவத்தினர் ஒருவர்பின் ஒருவராக நவீன ஆயுதங்களைத் தாங்கியபடி வீதி இருமருங்கிலும் அணி வகுத்து வந்து கொண்டிருந்தனர்.

அணியின் மத்தியில் இராட்சத ட்ரக் வண்டி ஒன்று உறுமிக்கொண்டு எம்மைக் கடந்து சென்றது.

ட்ரக் வண்டியில் பீரங்கிக்குழாய்களும் பொருத்தப்பட்டிருந்தன. இன்னும் பல ஆயுதங்களும் உள்ளே இருந்தன.

பத்து நிமிட நேரத்தின்பின் எமது வாகனங்கள் மந்திகை நோக்கிப் புறப்பட்டன.

**மந்திகை நோக்கி**

சுமார் 2.30 மணியளவில் செஞ்சிலுவைச் சங்கக் கொடியுடன் சென்ற 'உதயன்' பேப்பர் என்றோம்.

சுட்டுவிரலையும் கட்டைவிரலையும் இணைத்து டிக் என சுண்டிய அவர் 'ஆ! அப்படியா' என்று ஏளனமாக எக்காளமிட்டார்.

வாகனத்துக்குள் இருந்த எம்மிடம் அடையாள அட்டைகளை வாங்கிப் பெயர்களைக் கேட்டார்.

நாம் பெயரைக் கூறிய போது 'அதில்லை மேன், உங்கடை இயக்கப் பெயர் என்ன என்றுதான் பிறக்கத் தொடங்கி விட்டது.

கம்பீரமாக அவர்களுடன் "ஒப்பறேஷன் லிபறேஷ"'ல் பாதிக்கப்பட்ட நோயாளர் இருக்கும் வார்ட்டை நோக்கி நடந்தோம்.

அது என்ன வார்ட்டா? கண்கொண்டு பார்க்க முடியவில்லை. பீப்பாய்க் குண்டினால் பாதிக்கப்பட்ட சில பெண்கள் அவித்த இறால்போல் படுக்கைகளில் துவண்டு போய்க் கிடந்தனர்.

## அகதி முகாம்களில் உள்ளோர் அனுபவித்த அவலங்கள் மனித மனதைப் பிழியும் சோகக் கதைகள்!

எமது வாகனங்கள் மந்திகை ஆஸ்பத்திரி வளவில் உறுமி நின்றன.

மந்திகை ஆஸ்பத்திரி ஊழியர்கள், நோயாளர்கள் மத்தியில் வெளிக் கொணர முடியாத மகிழ்ச்சி.

அங்கேதான் எங்களுக்குச் சோதனைகள் ஆரம்பமாகின.

இராணுவ அனுமதி பெற்று வருவதற்காக ஆஸ்பத்திரியில் இருந்து 100 யாருக்கு அப்பாலுள்ள மினி இராணுவ முகாமுக்கு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளை அரச அதிபர் அழைத்துச் சென்றார்.

நாங்கள் இருவரும் ஆஸ்பத்திரி வளவில் தனித்து விடப்பட்டோம்.

எங்களைப் பயம் வந்து கவ்விக் கொண்டது. இருவரும் உடனடியாக எமது வாகனத்தில் ஏறி அமர்ந்து கொண்டோம்.

எம்மைச் சில 'கழுகுக் கண்கள்' நோட்டமிட்டன.

**எமக்கு வந்த கஷ்டம்**

எம்மிடம் வந்த ஒருவர் 'ஐயா இங்கே கவனமாக இருங்கள். இராணுவ உளவாளிகள் நோயாளிகளைப் போலவும், பொதுமக்களைப் போலவும் வாகன சாரதிகளைப் போலவும் நடமாடுகின்றனர். வீணுகக் கதைத்து மாட்டிக் கொள்ளாதீர்கள்' என்றார்.

அவர் சொல்லிச் சென்றதுதான் தாமதம் சைக்கிளில் வந்த ஒருவர் எமது வாகனத்தில் ஏறிக் கொண்டார்.

வாகனத்தில் இருந்த எம்மையும் சாரதியையும் கிளீனரையும் இருக்கும் இடம் கேட்டு கொச்சைத் தமிழில் விசாரித்தார். நாம் எல்லோரும் ஏகோபித்த குரலில் யாழ்ப்பாணம் என்றோம்.

தோளில் கமராவுடன் இருந்த எங்களில் ஒருவரை உற்று நோக்கிய அந்த நபர் 'நீர் பேப்பரா' எனக் கேட்டார்.

நாங்கள் இருவரும் ஆம் என்றோம். 'என்ன பேப்பர்' என்றார்?

கேட்டேன்' என்றார்.

நாம் பயத்தில் ஒன்றும் கூற முடியாத நிலையில் இருந்தோம்.

'யாழ்ப்பாணம் பேப்பரெல்லாம் புலிகள் நடத்திறதுதானே. நீங்களும் புலியா' என்று திருப்பிக் கேட்டார்.

அந்த வேளையில் அங்கு வந்த மற்றொரு சிப்பாயை அழைத்த அந்த நபர் 'மச்சான் நம்ம ஆக்கள் வந்திருக்காங்க கொண்டு போவமா' என்றார்.

விடயம் அறிந்த அந்த சிப்பாய் 'அவங்கள் ரெட் குரோசோட வந்தவங்கள். அவங்களோடை



இராணுவத் தாக்குதலில் சேதமடைந்த வல்வை சென். செபஸ்தியார் தேவாலயம்.

விளையாட வேண்டாம் வா' என்றார்.

தொடர்ந்தும் எங்களுடன் சீண்ட முனைந்த அந்த நபர் எமது அடையாள அட்டைகளைக் கையில் வைத்துச் சுண்டுவதும், வியர்வைக்கு விசுக்குவதுமாக இருந்தார்.

சுமார் 15 நிமிடங்கள் நாம் செத்துப் பிழைத்தோம்.

'நீங்கள் போகும் பொழுது திருப்பி எங்களைச் சந்தித்துத்தான் போக வேணும்' என்று கடும் உத்தரவும் போட்டார்.

ஒரு மாதிரி அந்த நபர் வானை விட்டு திரும்பித் திரும்பிப் பார்த்தபடி முகாமை நோக்கிச் சென்றார்.

எமக்குப் போன உயிர் திரும்பி வந்ததுபோல் இருந்தது. வடமராட்சியை விட்டுப்போனால் போதும் என்றிருந்தது.

அந்த வேளையில் முகாமுக்குச் சென்றிருந்த அனைவரும் திரும்பிக் கொண்டிருந்தனர்.

நாங்கள் ஓடோடிச் சென்று அவர்களுடன் சேர்ந்து கொண்டோம்.

**இந்தியப் பிரதிநிதியின் ஆறுதல்**

நடந்த விஷயத்தை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் கூறினேம். அவர்கள் எம்மை தட்டிக் கொடுத்துப் 'பயப்படாதீர்கள். எங்களுடன் சேர்ந்து வந்தவர்களை விட்டுவிட்டு ஒரு அங்குலம் தானும் அசைய மாட்டோம்' என்று எமக்கு நம்பிக் கையூட்டித் தைரியப் படுத்தினர்.

அவர்களின் அந்த வார்த்தைகளைக் கேட்ட

அந்தப் பெண்களில் ஒருவரிடம் இந்திய அதிகாரிகள் சம்பவம் பற்றிக் கேட்டபொழுது கத்திக் குழறியபடி தமக்கு ஏற்பட்ட அந்தப் பயங்கரத்தை அவலத்தை விவரித்தார். அந்தச் சம்பவத்தில் தனது சகோதரியையும், சகோதரியின் பிள்ளையையும் பறிகொடுத்து விட்டதை மிகப் பெரும் மனக் குமுறலுடன் அவர்களிடம் தெரிவித்தார்.

மற்றைய பெண்ணிடம் விசாரித்த பொழுது எனது கணவனையும் மகனையும் இழந்து விட்டேன். நான் இந்த உலகில் வாழ்ந்து என்ன பிரயோசனம் எனக் கதறியபடி கண்ணீர் சிந்தினர்.

இப்படியே பல பல துயரச் சம்பவங்களைக் கேட்டறிந்து கொண்ட அதிகாரிகள்மௌனமாக வார்ட்டை விட்டு அகன்று கொண்டிருந்தனர். எங்கள் மனங்களிலும் துயரங்கள், சோகங்கள் படர்ந்தன,

நெஞ்சில் கனத்துடன் அனைவரும் வாகனங்களில் ஏறி மயான பூமி

**★ கே. இரத்தினராஜசிங்கம் ★**
**எம். பேரின்பநாயகம்**

யாகிவிட்ட வல்வெட்டித் துறையை நோக்கிப் புறப்பட்டோம்.

மதியம் சாப்பிடாவிட்டாலும் எங்களுக்குப் பசி தெரியவில்லை. இராணுவச் சுவடுகள் பதிந்திருந்த வீதிகளில் எமது வாகனங்கள் ஓடிக் கொண்டிருந்தன.

**வல்வை மயான பூமி**

வீதியின் இருமருங்கிலும் இருந்த பல வீடுகள் இடிந்தும், நொருங்கியும், எரிந்தும், பிளந்தும்காணப்பட்டன. ஜீவராசிகளையே காணமுடியவில்லை.

வீட்டு வளவுகளினுள் புல்டோசர், இன்னும் இராணுவ கனரக வாகனங்கள் சென்ற அடையாளங்கள் கூட மறையவில்லை.

சோலையாய் இருந்த வளவுகள் பல நேபாம் எரிகுண்டின் தாக்குதலினால் எரிந்தும், கருகியும், காய்ந்தும் சுடுகாட்டைப் போல காட்சியளித்தன.

ஆங்காங்கே இராணுவ அட்டகாசத்துக்கு இலக்

இரும்புக்குவியல்களாகத் தேடுவாரற்றுக் கிடந்தன.

வாகனத்தில் சென்று கொண்டிருந்த இந்திய அதிகாரிகளும் நாமும் இதுவரை அறிந்திருந்ததை விட வடமராட்சிப் பகுதி பன்மடங்கு அழிந்திருந்ததைக் கண்டு கலங்கினோம்.

எமது 'தொண்டு' வாகனங்கள் சாம்பல் பூத்துப்போய்விட்ட வல்வெட்டித்துறை நகரத்தை அடைகிறது.

ஓ! அங்கே நாம் கண்ட காட்சிகள்......

ஊருராய் செய்திகள் அனுப்பும் தபால்நிலயம் ஒன்று தரையுடன் தரையாகி விட்டது.

வல்வெட்டித்துறை நவீனசந்தை ஐயோ! பாட்டு ஒலித்துக்கொண்டிருந்த இடம் ஓய்ந்து விட்டது, ஓய்வெடுக்கிறது.

சற்றுத் திரும்பினேம். மக்களுக்கு அபயம் அளிக்கும் ஆலயம்கூட விமானக் குண்டினால் அழிபட்டு இடிபாடாக இருந்தது.

வல்வெட்டித்துறை

கணவனை இழந்த, உற்றார் உறவினரை இழந்த, முழு உடைமைகளையும்





குண்டு வீச்சுக்கு இலக்கான வல்வெட்டித் துறை நகரிலுள்ள கடைகள் சிலவற்றை முதற் படத்திலும்—

முற்று முழுதாகச் சேதமடைந்த சிலவீடுகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

இழந்தவர்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்தனர்.

கினர்.

இந்த அகதிமுகாமில் உள்ள ஓர் இளம் பெண்ணிடம் எதிர்காலம்பற்றி வினவியபோது—

**இளம் பெண்ணின் மன உறுதி**

நாம் வாழ்வதென்றாலும்சரி, இறப்பதென்றாலும்சரி இந்த வடமராட்சியிலேதான் அது நடக்கும். எமது படிப்பு அழிந்தாலும், உடைமைகள் இழந்தாலும் எந்த வேளையிலும், எந்தக் காலத்திலும் இந்த வடமராட்சியைவிட்டு,எமது தாயகத்தைவிட்டுப் போக மாட்டோம்—என்று மிக உறுதியாகத் திடமான மனதுடன் தெரிவித்தார்.

இராணுவ அனுமதி கிடைத்த ஆறுமணிக்குள் எமது பயணத்தை முடித்துக்கொள்ள வேண்டியிருந்ததால் எமது இறுதி நிகழ்ச்சியாக வதிரி பரமானந்த ஆச்சிரமத்துக்குச் சென்றோம்.

பால்குடி மறவாத பச்சிளம் குழந்தைகள் பல தமக்கு ஏற்பட்ட பயங்கரங்களையெல்லாம் மறந்து அங்கு துள்ளி விளையாடிக் கொண்டிருந்தனர்.

இன்னும் சில சிறுவர், சிறுமியர் இனியும் இந்த வடமராட்சியில் இராணுவ அனர்த்தங்கள் ஏற்படாமல் இருக்க பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

அங்கு சுவாமி பரமானந்தாவிடம் இந்தியப் பிரதிநிதிகள் தமது நிவாரணப் பொருள்களைக் கையளித்தனர்.

அந்த முகாமில் 'ரீசேர்ட்' அணிந்த இளைஞர் கூட்டம் ஒன்றும் இருந்தது.

**'ரீசேர்ட்' இளைஞர்**

அந்த இளைஞர்களைப் பற்றி ஒரு பெரியவரிடம் கேட்டபோது, 'இந்த இளைஞர்கள் எல்லாம்

(7 ஆம் பக்கம் பார்க்க)

**வடமராட்சியில் மேமாத இறுதியில் நடந்த இராணுவத் தாக்குதலின்போது ஏற்பட்ட அழிவுகள் குறித்து யாழ்ப்பாணப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டபோதிலும் படங்கள் எதையும் வெளியிடமுடியவில்லை.**

**அரசினால் வருவிக்கப்பட்ட கொழும்புப் பத்திரிகையாளர் எடுத்த படங்கள் அவர்களின் பத்திரிகைகளில் வெளிவந்தன. அவை அரசாங்கத்தின் பக்கத்தைக் காட்டுவனவாகவே இருந்தன.**

**அடுத்த பக்கத்தைக் காட்டும் படங்களை 'உதயன்' மட்டுமே இவ்வாரம் பிரசுரித்தது.**

**"ஒப்பறேஷன் லிபறேஷ"னின் பின்னர் முதன்முதலில் வடமராட்சிக்குள் காலடிவைத்த யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்கள் உதயன்—சஞ்சீவிப் பிரதிநிதிகளே.**

**அவர்கள் அங்குள்ள நிலைமையை, அரசின் கோரத்தாண்டவத்தின் அனர்த்தங்களை இங்குஎழுத்திலும் நிழலிலும் படம் பிடித்துக் காட்டுகிறார்கள். இது சஞ்சீவி தனது வாசகர்களுக்கெனத் தரும் ஒரு தனித்துவ விருந்து.**

இளைஞர்களோ சிறையிலும், காலியிலும் அழுது கொண்டிருக்கிறார்கள்.

'ஐயா எம்மைக் காப்பாற்றுங்கள், எமக்கு சாப்பாடு வேண்டாம், எம்மைக் கொண்டு போங்கள், நிம்மதியாக வாழவிடுங்கள்'— நொந்துபோயிருந்த உள்ளங்கள் இந்தியப் பிரதிநிதிகளிடம் வாய்விட்டு அழுகின்றனர், ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளைவிடக் கண்ணீர் அலைகள் அங்கு கொந்தளிக்கின்றன.

வல்வெட்டித்துறை நகரமே தூர்ந்துபோயுள்ளது. அலைகடல் எட்டிப் பார்க்க முயலுகிறது முடியவில்லை. திரும்பி ஓடுகிறது கடலைநோக்கி.

எரியுண்ட வீடுகள், கடைகள், இடிந்த வைத்தியசாலைகள், வாசிகசாலைகள் அழிந்தஆலயங்கள், சிதைந்த கோபுரங்கள் ஐயகோ! என்னே பயங்கரம், சுடலையில் எரிந்த மனித எலும்புகள் போல் வல்வெட்டித் துறைக் கட்டடங்கள் காட்சியளிக்கின்றன.

**கரவெட்டியில்**

கரவெட்டி சென் அந்தனிஸ் அகதிமுகாமினுள் எமது வாகனம் நுழைகிறது.

அங்கே [illegible]

இந்திய அதிகாரிகள் வருகையைக் கண்டு தமது வேதனைகளை, உள்ளக்குமுறல்களை கத்திக் குழறி வெளிப்படுத்தினார்கள்.

அவர்களுக்கு இந்திய பிரதிநிதிகள் ஆறுதல் கூறி, அவர்களைத்தேற்றி இந்திய நிவாரணப் பொருள்களை வங்



தாக்குதலுக்குள்ளான வல்வெட்டித் துறை அம்மன் கோயிலைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் கூடிநிற்கிறார்கள்.



அண்மையில் கைதாகிபூஸா கொண்டு செல்லப்பட்டுப் பின் விடுதலை செய்யப்பட்ட "ரீசேர்ட்" இளைஞர்களுடன் இந்திய செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி லெப்டினன்ட் கேர்ணல்வேணுகோபால் அளவளாவுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னதானம்



மொருகு வர்ணம் பூசப்பட்ட இரண்டடுக்கு மாடி வீடு! மாபிள் கற்கள் பதிக்கப்பட்ட தரை! கொழும்புறோட்டுக்களைப் போல் தார் ஊற்றப்பட்டிருக்கும் வெளி முற்றம்! வீட்டின் நிறத்திற்கு ஏற்றாற்போல் மெல்லிய நீல வர்ண ஆர்ப்பிக்கோ மெத்தைகளினுலான இருக்கைகள்! வீட்டோடு சேர்ந்த கராஜ்ஜில் பொன் நிறத்திலுலான பொக்ஷ்வெக்கன் கார்! அந்த ஊரிலே யார் வீட்டிலும் இல்லாத ஒரு பிளானில் 'அழகிய ரோஜா மலர்களைப் போல்' கம்பிகளால் வளைத்து ஒட்டப்பட்ட வாசல்கேற்! பகலில் மட்டும் கட்டிவைத்து இரவில் அவிழ்த்து விடப்படும்; மற்றோர்பார்த்துப் பீதியுறும் அல்ஷேஷன் நாயின் காவல். இவை எல்லாவற்றையும் அழகுக்கு அழகு செய்யும் வெளிநாட்டு, உள்நாட்டுப் பல வர்ணக் குரோட்டன் செடிகள்! வானத்து நட்சத்திரங்கள் கண்களைச் சிமிட்டுவது போன்ற அழகிய பூந்தோட்டம்! தெருக்கரையோரமாக ஆலயரதங்கள் போல் நிமிர்ந்து நிற்கும் அசோகா மரங்கள்! முன்பக்க இருமூலையிலும் வர்ண பல்புகள் பூட்டப்பட்ட சவுக்கு மரங்கள்! இவற்றையெல்லாம் மற்றவர்கள் கண்ணூறு போட்டிடுவார்கள் என்பதற்காக உயர்ந்த கம்பத்தில் மாட்டப்பட்டுள்ள நாலூறு வெருளிப் படம்! இத்தனையையும் சுற்றிவர வர்ணம் பூசப்பட்டு விளிம்பில் பீங்கான்கள் பதிக்கப்பட்ட பாதுகாப்பு மதிற்சுவர்!

கண்ணைப் பறிக்கும் இந்த அழகிய மனையின் சொந்தக்காரரர் என்று சொல்லக்கூடியளவிற்கு பென்சனியர் கனகரத்தினமும், மனைவி செல்லம்மாவும், இரண்டாவது மகன் திலகனும், கடைசி மகள் ஜனகாவும் தான் அந்த வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள்.

தன் இரண்டு ஆண் சிங்கங்களுக்கு ஒருத்தியாகப் பிறந்த கடைசிச் செல்லத்தின் பெயரிலேயே 'ஜனகபவனம்' என்று வீட்டுக்குப் பெயர் வைத்திருந்தார் கனகரத்தினம்.

ஆண்டாண்டு காலமாய் ஆட்சிக்கொலுவீற்றிருக்கும் அன்றைய அரசாங்கங்களின் சிவில் சேவையில் றேட்டு ஒவசியராக இருந்து ஆசை தீரப் பல வழிகளிலும் உழைத்துத் தனவான் ஆனவர்; ஆட்சி கொலுவீற்றிருக்கும் அராஜக ஆட்சியில் கவிழ்ந்திருக்கும் இன்றைய சிவில் நிர்வாகத்தில் பென்சனியராக இருக்கிறார் கனகரத்தினம்.

இரண்டு ஆண்பிள்ளைகளையும், செல்ல மகள் ஜனகாவையும் தன்னைப்போல் உத்தியோகம் பார்க்க வைப்பதற்காகப் பணத்தை அள்ளி அள்ளி இறைத்து கல்லூரிகள், ரியூசன் சென்ரர்கள் என்றெல்லாம் ஆளுக்கொரு சயிக்கிள் வாங்கிக் கொடுத்து படிப்பித்து வந்த காலம். இராணுவ வாகனங்களுக்குக் கண்ணிவெடி வைக்கத் துவங்கிய காலம்!

சொந்த மண்ணிலேயே நடைபாதையிலும், வாகனங்களிலும், வீடுகளுக்குள்ளும், தொழில் ஸ்தாபனங்களிலும் இராணுவத்தின் துப்பாக்கி வேட்டுக்களுக்குத் தமிழினம் பலியான காலம்!

இவையெல்லாவற்றையும் எதிர்த்துப் போராடி சுதந்திரம் சமைக்கப் பல இளைஞர்கள் இயக்கங்களிற் சேர்ந்து படகேறிய காலம்!

வீட்டுக்குவீடு ஒவ்வொரு இளைஞனும் காணமற் போகும் மர்மங்களை அறிந்த கனகரத்தினத்தார் அப்பொழுது ஏ. எல் படித்துக் கொண்டிருந்த மூத்த மகன் சிவராம் இயக்கங்களிற் சேர்ந்து விடுவான் என்பதற்காக 'இனி இஞ்சை வாழேலாது... கண்ணுக்குப் பார்வையான பெடியளையெல்லாம் சுட்டுத்தள்ளப் போருங்கள்' என்று சாட்டுப்போக்குக்காட்டி மகனின் படிப்பை இடையில் மறித்து, அந்நிய நாடான மேற்கு ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தார்.

அப்பொழுது பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த இரண்டாவது மகன் திலகனையும், செல்லமகள் ஜனகாவையும் தொடர்ந்து படிக்கச் சொல்லி... படிப்பித்து வந்தார்.

இராணுவ அக்கிரமங்கள் தலைவிரித்தாடின! தமிழ்மக்கள் சிறுகச் சிறுக சேர்த்து வைத்த சொத்து, சுதந்திரம், உயிர்களை இழந்து அகதிகளாகிக் கொண்டிருந்தார்கள்! தீவிரவாதத்தின்கை மேலும் மேலும் ஓங்கிக் கொண்டிருந்தது......

2

அன்றொருநாள் கனகரத்தினத்தின் கால்களில் சிறுவீக்கம்! நடக்கும்போது விறைப்பு! உடல் நடுக்கம்... 'செல்லம் என்னாலை நடக்கக் கிடக்க ஏலாமல் கிடக்கு...... காலும் சாதுவா வீங்குது...... என்ன நாசம்கட்டேோ தெரியேல்லை' என்று ஏக்கத்தின் சாயலில் மனைவிக்குச் சொன்னார்.

...... எண்டாலும் ஒருக்கா நாளைக்கு ஆருமொரு ஸ்பெஷலிஸ்ரிட்டைக் காட்டுவம்...' என்று தொடர்ந்து கொண்டே சென்றாள் செல்லம்மா.

தன் காலுக்கு என்ன நடந்தது என்று தெரியாது காசுகட்டியாவது தன்னுடைய நோய்க்கு வைத்தியம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்திருந்தார் கனகரத்தினம்.

மறுநாட்காலை தங்கள் சொந்தப்பாவிப்பிலேயே உள்ள பொக்ஷ்வெகன் காரில் கடைசி மகனுடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல தனியார் டிஸ்பென்சரிக்குச் சென்று ஒரு ஸ்பெஷலிஸ்ட் டாக்டரிடம் காட்டி வீடு திரும்பியிருந்தார்.

'என்னவாம்?...... ஏனும் கால் வீங்கினது? ......' என்று கணவனின் காலில் ஏற்பட்ட நோயை வினவினாள் செல்லம்மா. கனகரத்தினத்தாரோ பேயறைஞ்சவர் மாதிரி ஆர்ப்பிக்கோ மெத்தையில் சரிந்து படுத்தபடி 'சிவ சிவா!.. நான் செய்த அட்டூழியங்களுக்கு இப்பதானோ தண்டனை!...... பத்துப் பீப்பா தார் ஊத்தெண்டால் ரெண்டு பீப்பா தார் ஊத்திப் போட்டு மிச்சம் எட்டையும் பிளாக்மாக்கெற்றிலை வித்தனான்!... இருவது கியூப் கல்லுப் பரவெண்டால் பத்துக் கியூப் கல்லைப் பரவிப் போட்டு மிச்சத்தைப் பிளாக்கிலை!...... நல்ல மணல் பறிச்சுப்போடு என்றால் றோட்டுக்கான் மண்ணை வெட்டுவிச்சுப் போட்டனான்!... பேசிற்றிலை கள்ளப் பேருகளைப் போட்டு அதுகளின்ரை சம்பளத்தை எடுத்தனான்!... பாவங்கள் முறிய முறிய வேலை செய்யிறதுகளை எப்பன் தன்னும் ஆறவிடமாட்டன்! ... அதுகளுக்கெல்லாம்! ...... தெய்வம் நிண்டறுக்கும் எண்டது சும்மாவே? ...' என்று தன் மனதில் கடந்தகால குறுக்குவழி முன்னேற்றத்தை இரைமீட்டபடி மனைவிக்குப் பதிலே கூறுது யோசித்தபடி இருந்தார்.

'எடே திலகன், என்னடா? கொப்பர் ஒண்டும் சொல்லுறுருமில்லை, யோசிச்சுக் கொண்டிருக்கிறார்; என்ன வருத்தமாம்?...' எனக் கணவனிடம் இருந்து அறிய முடியாததை மைந்தனிடமிருந்து அறிய, திலகனைப் பார்த்துக் கேட்டாள் செல்லம்மா.

'அப்பாவுக்கோ?... அவருக்கு பாரிசவாதப் பிளானும்... ஏதோ மருந்துகளும் குடுத்தவை...... ஒவ்வொருநாளும் காலமையிலை எழும்பி ஒரு மைல் தூரமாவது நடக்க வேணுமெண்டு சொன்னவதாம்' என்றான்.

[illegible] ...டுப்போன கடவுளே...!

கடைக்குக்கூடக் காரிலை போற மனுசனுக்கு...... இந்த வருத்தத்தைக் குடுத்தியே' என்று கஷ்டங்கள் வரும்போது மனிதர்களால் பயபக்தியுடன் வணங்கும் அந்தக் கடவுளைத் திட்டினாள் செல்லம்மா.

இப்பொழுதெல்லாம் கனகரத்தினத்தார் மனைவி, மக்கள் எழும்ப முன்னர் அதிகாலை நான்கு மணிக்கே மூத்த மகன் சிவராம் ஜேர்மனியிலிருந்து அனுப்பிய அழகிய வர்ணத் துவாயால் தலையை மூடிக் கட்டி, கால்களுக்குப் பாதரட்சைகளை மாட்டிய வண்ணம் வேப்பம் குச்சியால் பல் தீட்டியபடி குன்றும்குழியுமாய்க் கிடக்கும் தெருக்களிலே நடக்கத் துவங்கி விடுவார்.........

அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் தினமும் நடக்கத்துவங்கும் கனகரத்தினத்தார் சரியாக ஆறுமணிக்கு அவ்வூரின் சந்தியிலிருக்கும் கிராம அபிவிருத்திச்சங்க வாசிகசாலையடியை வந்தடைந்து அதில் நிற்கும் முதியவர்கள், இளைஞர்கள் கூட்டத்துடன், 'நாட்டிலே இராத்திரி என்ன நடந்தது?...' 'நேற்று என்ன நடந்தது?...' என்று நாட்டின் நடப்பு நிலைபற்றியும், இன்னலுறும் தமிழினத்தின் விடிவுக்காய் தீர்வு காண இந்தியாவிலிருந்து ஸ்ரீலங்காவிற்கும், ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்கும் தூதுவர் பதவியேற்று உல்லாசப் பயணம் செய்யும் சிமான்களின் வாய்களிலிருந்து உதிரும் வார்த்தைகள் எல்லாவற்றையும் பற்றியும், எத்தனை ஆமிகள் செத்தது? எத்தனை பெடியளுக்குக் காயம்?...என்பது பற்றியும் ஒருசிறிய மாநாடு வைப்பார்கள். 'எப்பிடிச் சொன்னாலும் எங்கடை பெடியங்களின்ரை திறமையாலை தான்...நாங்கள் எப்பனெண்டாலும்... நிம்மதியாய் இருக்கக்கூடியதாய் இருக்கு...உண்மையிலை திறமைசாலியள் தான்'' என்று இளைஞரைப் புகழத் தவறமாட்டார்.

கனகரத்தினத்தார் இவை எல்லாவற்றிற்கும் பின்னர்தான் றேடியோவில் ஆறேமுக்கால் இந்தியாச் செய்தி கேட்க வீட்டுக்கு வருவார்.

3

அன்றொருநாட் காலை மகன் திலகனும், மகள் ஜனகாவும் காலை ரியூசன் கிளாசுக்குப் போயிருந்த வேளை, காலைக் கடன்களை முடித்த பின்னர்; வேலைக்காரச் சிறுமியைக் கொண்டு காலை உணவுக்கான ஆயத்தங்களைச் செய்யும்படி கூறிவிட்டு; செல்லம்மா கணவருடன் அமைதியாகக் கதைத்தாள். 'இஞ்சாருங்கோ... வெளியிலை ஒருத்தருக்கும் சொல்லிப்போடாதையுங்கோ... எங்கடை திலகன் பெடியளோடை திரியிருனும்... சிலநேரங்களிலை அவங்களின்ரை நோட்டீஸ் ஒட்டவும் போறவனும்...இப்பிடியே விட்டால்,அவன் ரியூசன், ரியூசன் எண்டு அவங்களோடைபோய் சாகக்கீகவல்லேபோறுன்'' என்றாள்.

மின்சாரம் தாக்கி மீண்டவர்போல் திக்கித்திணறி 'இதென்னடியாத்தை தலையிடிக்கு மேலை தலையிடியாய்க் கிடக்கு!... ஜனகாவைப் பற்றிக் குறையாய்க் கந்தையா சொல்கிறுன். திலகனைப்பற்றி நீ சொல்லிருய்...என்ன செய்யிறது எண்டு எனக்குத் தெரியேல்லை இந்த வருத்தத்தோடை...' என்று கடும் சினத்துடன் கலந்தகலக்கத்தில்உளறினார். 'அப்பிடியென்ன? ஜனகாவைப்பற்றிக் கந்தையாண்ணை சொன்னவர்' என்று சட்டெ[illegible] செல்லம்மா. 'பிறகென்ன! அவள் ஆவேசம் குறைந்த

சாதிப் பெடியளோடை கதைக்கிறுளாம்!! .. அவன் மினித்தியேட்டர் வைச்சிருக்கிறுன்'' என்றார். 'ஐயய்யோ! ! !... நாங்கள் இஞ்சை தனியா இருந்தாலும் பறவாயில்லை, ரெண்டுபேரும் படிச்சு முறிச்சது காணும்... எங்கடை குலகோத்திர மானம், மரியாதை எல்லாம் போப்போகுது!...' என்று தலையில் கையைவைத்துவழமையான குரலிலிருந்து மாறுபட்ட, ஆவேசம் பொங்கியெழும்படி செல்லம்மா தொடர்ந்தாள். 'உடனை ரெண்டுபேரையும் எப்பாடுபட்டாவது பெரியவனிட்டை அனுப்பிப்போடுங்கோ' என்று பிரச்சினைக்குத் தீர்ப்பும் வழங்கினாள்.

நீண்டநேர சிந்தனையின் பின்னர்; ஒருகிழமைக்குள் தனது இரு பிள்ளைகளினதும் சம்மதத்தையும் எதிர்பாராது பாஸ்போர்ட்! பொன்ட்! ரிக்கெற்றிங்! என்றெல்லாம் ஒரு ஏஜென்சிக்காரனோடு செய்வித்து; அயலவர்க்கே தெரியாத அளவிற்கு, பிள்ளைகள் இரண்டையும்; தற்போதைய சூழ்நிலையில் மேற்கு ஜேர்மனியில் உழைப்பதோ! அல்லது அங்கு போவதோ! கஷ்டம் என்று எண்ணி கனடாவுக்குப் போனால் உழைக்கலாம் என்ற நோக்கோடு இங்கே வாழமுடியாது எனும் முலாம்பூசி' ஏஜென்சிக்காரனுடன் கனடா சென்று, பணத்தோடு பணம் சேர்க்க, தலைக்கு ஒரு லட்சம் கொடுத்து பிள்ளைகள் இருவரது படிப்பையும் அரைகுறையில் நிறுத்திவிட்டு கனடாவுக்கு அனுப்பி வைத்தபின் செல்லம்மாவும், கனகரத்தினத்தாரும் நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டார்கள்.

மாதங்கள் மூன்று உருண்டோடின. வெளிநாடுசென்றபிள்ளைகளின் கடிதங்கள் வராததையிட்டும், அரசின் சீர்கெட்ட சிவில் நிர்வாகத்தில் உரிய வேளையில் பென்சன்பணம் கிடைக்காத எரிச்சலிலும், முன்விருந்தாவில் செல்லம்மா தெருவைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள்......

4

கேற்றைத் திறந்து இரண்டு மூன்று இளம் பெண்களும், ஒரிரு இளைஞர்களும் உள்ளேவர அவர்களைக்கண்ட செல்லம்மா; அவர்கள் விருந்தவில் ஏறமுன்னரே வெளிமுற்றத்துக்கு வந்தாள். 'அம்மா நாங்கள் கிளிநொச்சி, திருகோணமலை, மன்னாரிலை பாதிக்கப்பட்டுவந்த எங்கடை தமிழ்ச் சனத்துக்கு காளிகோயிலில் அவிச்சுக் குடுக்க உங்களால் இயன்ற அரிசியோ! அல்லது நிதி உதவியோ! செய்யுங்கோம்மா'என்று ஓர் இளம்பெண் பரிவோடு கேட்க 'ஐயோ பிள்ளை... உப்பிடி உப்பிடி... எத்தினைபேருக்கெண்டு நாங்கள் குடுக்கிறது......கலக்சன்எண்டு வாறுங்கள் ஒருபக்கத்தாலை... அதுக்குள்ள நீங்களும் ஒருபக்கம்...... இஞ்சை நாங்கள் படுகிற பாடு கடவுள் ஒருத்தனுக்குத்தான் தெரியும்!... அந்தாள்ரெண்டு மாசமா பென்சனே! ஒண்டோ! இல்லாமல் இருக்கிறுர்' எனதொடர் பல்லவி பாடினாள் செல்லம்மா. 'அம்மா அப்ப ஒரு சிறங்கை அரிசியாவது தாருங்கோ?' ஓரிளைஞனின் தாழ்மையான வேண்டுகோள். 'தம்பி எங்களுக்கே!... இண்டைக்குக் காச்சவே அரிசியில்லாமல் இருக்கிறம்... அங்காலையங்காலை போய்க் கேளுங்கோ இனிமேல் பார்ப்பம்'' என முடிவாகப் பஞ்சங்கொட்டினாள் செல்லம்மா.

கூட்டிலே அடைத்து நின்ற அல்ஷேஷன் நாய் 'அஉவ்... ...அஉவ்... ... அஉவ்...'என்று அவர்களைப்பார்த்து குரைக்க, பொதுநல நோக்கோடு வந்த இளைஞர்கள், யுவதிகள் அங்கிருந்து அசடு வழியும் முகத்தோடு! வெளியேறினார்கள்.

சிறிது நேரத்தில் தபால் பியோனின்பெல் 'டிரிங்...ங்......டிரிங்...... டிரிங்' ஒலிக்க, செல்லம்மா ஓடோடி வந்து கடிதத்தை வாங்கி ஆவா

சஞ்சீவி சிறுகதை

வெனப் பிரித்து வாசித்தாள். 'என் அன்புக்குப் பிரியமான அம்மா, அப்பா... எங்களைக் கனடாவுக்கு என்று கூறி அழைத்துவந்த ஏஜென்சிக்காரன் சிங்கப்பூரிலை தவிக்கவிட்டிட்டு தலைமறைவாகிவிட்டான் நாங்கள் சாப்பிடவழியின்றி சிங்கப்பூரில் உள்ள காளி கோயிலில் அன்னதானச் சாப்பாட்டிலேயே வாழுகின்றோம். -அன்புமகன் திலகன்.

செல்லம்மாவின் ஆசைகள்! கற்பனைகள்! காற்றினிற் பறக்க! பூகம்பம் ஏற்பட்ட நிலத்தில் நின்றவள்போல்! தலையைச்சுற்றி, அந்த ஆர்ப்பிக்கோ மெத்தையிற் சரிந்துபடுத்தாள்.

பிறந்த மண்ணில் அகதிகளாய் உள்ள ஏழைகளுக்கு ஒரு சிறங்கை அரிசிதன்னும் கொடுக்காததையிட்டு விம்மிவிம்மி அழமுனைந்ததும்; செல்லம்மாவின் செல்வச்செழிப்பால் அழக்கூடிய சந்தர்ப்பம் இதுவரை கிடைக்காததால், அவள் கண்கள் கண்ணீர்சொட்ட மறுத்தன,

(யாவும் கற்பனையே)

- க. அருந்தவராசா -

# தாய் சொல்லைத் தட்டாதே!

அழகாபுரி என்ற ஊரிலே அழகம்மா என்றொரு பெண் இருந்தாள். அவள் வீடு வீடாகச் சென்று கூலி வேலை செய்து பிழைப்பவள். அவளுக்குக் குவலயன் என்றொரு மகன் இருந்தான். அவன் பள்ளியிற் படிப்பவன்.

தனது மகன் குவலயன் படித்துப் பட்டம் பெற்று டாக்டராக வர வேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். அதற்காகத் தன்னாலான மட்டும் சலியாது உழைத்தாள். குவலயனின் தேவைகளைக் காலந்தாழ்த்தாது உடனுக்குடன் கவனித்தாள்.

தாயின் விருப்பத்தை அறிந்த குவலயனும் நன்கு சிரத்தையோடு கற்று வந்தான். ஒழுக்கத்திற் சிறந்து விளங்கிய அவன் தாய் சொல்லைத் தட்டாது நடந்து வந்தான்.

இப்படியிருக்கும் நாளில் ஒருநாள் குவலயன் அயலூரில் இருக்கும் தனது மாமனாரின் வீட்டுக்குப் போக எண்ணினான். அவன் தன் விருப்பத்தைத் தாயாரிடம் வெளியிட்டான்.

'தம்பி! நீ மாமா வீட்டுக்குப் போவதானுற் போய்விட்டு வா. மாமியை நான் விசாரித்ததாகச் சொல். நளினியிடமும் கூறு' என்று சொல்லியனுப்பினாள். அவளுக்குத்தெரியும் குவலயன் தனது மைத்துனி நளினியைப் பார்க்கத் தான் போகிறான் என்று.

'குவலயா, நீ போகும் போது இந்தப் பானையையும் கையோடு எடுத்துக் கொண்டு போ!' என்று சொல்லி ஓர் அழகான புதுப் பானையொன்றைக் கொண்டு வந்து கொடுத்தாள். அதன் வாய் ஒரு மெல்லிய இலேசான மூடியினால் மூடப்பட்டிருந்தது.

ஏன்? எதற்காக— என்று எந்தவித கேள்வியும் கேட்காமல் அதனையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான் குவலயன்.

பாதி வழி சென்றிருப்பான். நடந்து வந்த களைப்பினால் காலாறச் சற்றுநேரம் இளைப்பாறிச் செல்லலாமே என்று ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான். அப்படியே கண்ணயர்ந்தும் விட்டான்.

நண்பகல் ஆகி விட்டதால் உச்சிவெயில் தாங்க முடியவில்லை. புற்றிலிருந்து புறப்பட்டஒரு பாம்பு மெதுவாக வெளியே நகரலாயிற்று. குவலயன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

என்ன ஆச்சரியம்! அவன் கொண்டு வந்த பானையிலிருந்து மூடியைத் தள்ளிக் கொண்டு புறப்பட்டது ஒரு நண்டு. குவலயனைத் தீண்டுவதற்கு ஆயத்தமான பாம்பை அது தன் கொடுக்குகளால் 'நறுக்' கென்று கடித்துவிட்டது.

குவலயனுக்கு வரவிருந்த பேராபத்து வெகு சுலபமாக நீங்கியது. பாம்பைக் கடித்துக் கொன்ற நண்டு மறுபடியும் பானைக்குள்ளே போய் முடங்கிக் கொண்டது.

நித்திரையிலிருந்தும் விழித்தெழுந்த குவலயன் நிகழ்ந்தவற்றை ஊகித்தறிந்தான். தனது தாயார் கொடுத்தனுப்பிய பானையையும் அதன் உள்ளிருந்த உயிரினத்தின் உதவியையும் எண்ணி எண்ணி இறும்பூதெய்தினான்.

தான் தன் தாயாரின் சொல்லைத் தட்டி அதனை எடுத்துச் செல்ல மாட்டேன் என்று சொல்லி இருந்தால் இப்போது என்ன நடந்திருக்கும் என்பதை நினைக்கவே பயமாக இருந்தது.

தாயைத் தெய்வமாகப் போற்றித் தாய் சொல்லைத் தட்டாமல் நடந்ததினால் குவலயன் உயிர் பிழைத்தான். இரவு நெருங்கு முன்னே தன் மாமன் வீட்டை அடைந்து விட வேண்டுமென்ற நோக்கத்தில் ஓட்டமும் நடையுமாகத் தனது பயணத்தைத் தொடர்ந்தான் குவலயன்.

சுற்றில் தனது தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து ஒரு பெரிய டாக்டராக வந்தான் குவலயன்.

பிள்ளைகளே! நீங்களும் உங்களது தாய் சொல்லைத் தட்டாது நடவுங்கள். அப்போதுதான் குவலயனைப்போல் நீங்களும் குவலயம் போற்றும் உத்தமனாக வரலாம். ★

- நிதர்ஸன் -




# கர்ப்பிணிகளுக்கு ஏற்ற உணவு

போதுமான அளவு புரதங்கள் மாவுப் பொருள்கள், கொழுப்புப் பொருள்கள். வைட்டமின்கள், தாது உப்புக்கள் இவை கொண்ட முழுமையான உணவைக் கர்ப்பிணிப் பெண்ணுக்குக் கொடுக்க வேண்டும். முதல் மாதங்களில் புளிப்பும் கரிப்புமான உணவுகளை உட்கொள்ள கர்ப்பிணிகளுக்கு ஆவல் உண்டாகும். இதில் ஒரு தீங்கும் இல்லை. ஆனுல் அளவுக்கு அதிகமாகக் கூடாது.

அவர்கள் உணவில் மாவுப் பொருள்களைக் கட்டாயம் சேர்க்கவேண்டும். மாவுப்பொருள் போஷாக்கு அளிக்கும். காய்கறிகள், பழங்கள், ரொட்டி இவற்றில் மாப்பொருள் இருக்கிறது. கோதுமை ரொட்டி மிகவும் நல்லது. வைட்டமின்கள் காய்கறிகளிலும் பழங்களிலும் இருக்கின்றன.

குளிர் காலங்களிலும், வசந்த காலத்திலும், இந்தப் பொருள்கள் குறைவாகக் கிடைப்பதாலும் கிடைக்கும் பொருள்களிலும்வைட்டமின்கள் குறைவாக இருப்பதாலும் துணை உணவாக, ஏ.பி.சி.டி.ஈ முதலியவைட்டமின்களை ஸிரப்பாகவோ, மாத்திரையாகவோ எடுத்துக் கொள்ளவேண்டும்.

இந்த வைட்டமின்கள் உணவில் இல்லாவிட்டால் கர்ப்பத்தின்போது பல சிக்கல்கள் ஏற்படும். குறிப்பாக வைட்டமின் பற்றுக்குறை இருந்தால் கருவின் வியாதி, அகால பிரசவங்கள், கருச்சிதைவுகள் போன்றவை நிகழலாம். ★

- இ இலட்சுமி

## சுவைமிகு இனிப்புவகைகள்

சிறுவர் முதல் பெரியோர்வரை இனிப்பு உணவுகளை விரும்பாதோர் இல்லை எனலாம். நாமே தயாரித்து வீட்டிலுள்ளோருக்கும் விருந்தினருக்கும் பரிமாறிவிட்டால் மகிழ்வுக்குத்தான் இணை ஏது.

இதோ,சில இனிப்புணவுகள் தயாரித்து வழங்கிடுவீர்.

**பப்பாசி மஸ்கற்**

**தேவையான பொருள்கள்:**

½கிலோ பப்பாசி
¼கிலோ சீனி
½தே. கரண்டி ஏலக்காய் தூள்
150 கிறும் ரவை
1 மேசைக் கரண்டி நெய்.

**செய்முறை:**

நன்கு முற்றிப்பழுத்த பப்பாசிப் பழத்தைத் தெரிவுசெய்து துருவிக் கொள்ளவும். பின்பு அதனை ஒரு பாத்திரத்திலிட்டு, கொதிநீரை அதன்மேல் ஊற்றி பத்து நிமிடத்திற்கு விடவும். பின்பு அதனை ஒரு தூய்மையான வெள்ளைத் துணியிலிட்டுப் பிழிந்து கொண்டபின் பழத்தை நிறுத்து எடுக்கவும். பின்பு சீனி,ரவை (வறுக்கப்பட்டது) பழம் என்பவற்றைச் சேர்த்து அடுப்பில் வைத்து கிண்டவும். பின்புபாணி இறுகிவரும் வேளையில் வாசனைப் பொருட்களை இட்டுக் கிண்டவும். பின்பு பாத்திரத்தில் ஒட்டாத தன்மைவரும்போது வேறொரு பட்டர் அல்லது மாஜரீன் தடவிய தட்டில் கொட்டிப்பரவி துண்டங்களாக்கிப் பரிமாறல் வேண்டும்.

**நீற்றுப் பூசணிக்காய் மஸ்கற்:**

**தேவையான பொருள்கள்:**

½கிலோ பூசணி
¼கிலோ சீனி
150 கிறும் ரவை
1மே.கரண்டி நெய்
½தே.கரண்டி ஏலப் பவுடர்.

**செய்முறை:**

மேலே கூறப்பட்ட பப்பாசி மஸ்கற்றின் செய்முறையைப் போன்றே இதனையும் தயார் செய்யவும்.

வசுமதி முத்துக்குமாரசாமி




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி கவிதைக் கதம்பம்

## நாளைய உதயம்

புதிய பயணத்திற்கு
பாதைகள்
தயாராகி விட்டன!
உங்களது
பாதங்கள்தான் - இனிப்
பயணப்பட வேண்டும்!

தம்மைப் பிடித்த
நய வஞ்சகங்கள்
இந்த அமாவாசையோடு!
எரிந்து போகட்டும்!

இதய அழுக்குகள்
எல்லாம் - அந்த
நெருப்பில் எரிந்து
சாம்பராகட்டும்!

நாளைய உதயம்
நமக்காகக் காத்திருக்கிறது!
இன்றைய இரவிலேயே
இறந்து விடாதீர்கள்!
நாளைய உதயம்
நமக்காகக் காத்திருக்கிறது!

கு. மிருதுபாஷினி

★ ★ ★

## வருக இந்திய நல்லுறவே!

வலுமிக்க எங்கள் கரங்களை மேலும்
வலுவூட்ட நீ வருக
உரமிக்க நெஞ்சுகளுக்கு
உறுதுணைகள் நீ தருக.

எங்கள் விடுதலைப்பயணத்தை தடைசெய்யும்
சகல முற்றுகைகளையும் துடைத்தெறிக
வருக! இந்திய நல்லுறவே
எங்கள் விடுதலை வழிப்பயணத்தை -
உறுதி செய்க.

சு . வி

★ ★ ★

## ஆளும் உரிமை உண்டு

ஈழம் ஆதி நாடெடா - அதன்
இறைமை நமக்கு உண்டடா
ஈழம் வடக்குக் கிழக்கெடா - அங்கு
இருப்போர் மொழியோ - தமிழெடா
ஆளும் உரிமை உண்டெடா - தமிழன்
அடிமை குடிமை யல்லடா
வாழும் நாட்டில் உரிமைகள் - அரசு
வழங்க மறுப்பதேனடா.

ஆண்ட பெருமை அறிந்திடில் - தமிழன்
ஆதி சரிதை புரட்டடா
வேண்டும் சான்று உண்டெடா - வீணர்
வெட்டிப் பேச்சு எதற்கெடா
ஆண்ட தமிழன் அடிமையோ - அதை
ஆரும் ஏற்க முடியுமோ.

- கண்டாவளைக் கவிராயர்

★ ★ ★

## நன்றி...மீண்டும் வருக!

கப்பலிலே பொருள் கொண்டு தந்தார்
கருணையினல் எமைக்காக்க வந்தார்
குப்பையிலே கிடந்திங்கே கலங்கியழ...
கரங்களிலே உணவள்ளித் தந்தார்
எப்போதும் எம்இரத்த மென்ற எண்ணம்
எமக்கூட்டிச் சோதரர்போல் வந்தார்
இப்பரிவை எப்பொழுதும் போற்றி
எமதுறவை வளர்த்திடுவோம்; நன்றி!

பிள்ளையர்க்குப் பால்மாவைத் தந்தார்
பெரியோர்க்குச் சோறுதனைத் தந்தார்
கொள்ளையரின் தொல்லைகளால் வெந்து
கொடுமைபல கண்டோரின் நெஞ்சில்
கொள்ளைமகிழ் வெய்திடவே வைத்தார்
குவலயத்தில் தர்மமதைக் காத்தார்
எல்லையினை வெல்வதற்கு இன்னும்
ஏற்றபலம் அவர்மூலம் வேண்டும்!

சுகவீனத் தால்வருந்தும் போதும்
சொந்தவினம் செத்தழிதல் கண்டு
அகமுடைந்து கோடியெனத் தந்த
அருந்தலைவன் 'எம்ஜியார்'க்கும் நன்றி
சுகமடைந்து அவனெழும்ப வேண்டி
சொந்தமுடன் மனமிரங்கிப் பாட
மிகவலிமை எமக்கருள வேண்டும்;
மேன்மையுறு தன நாடே மீட்சி!

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

★ ★ ★

## அழிக்க முடியாது!

அவர்கள்
எங்களையென்ன
செய்யமுடியும்?
எங்களுயிரை......
உடலினுள்
ஒளிந்திருக்கின்ற
அந்தக் காற்றை......
வெளியேற்ற முடியும்......
எமதுடல்களை
சிதைக்கமுடியும்......
வேறென்ன
செய்யமுடியும்......?
எங்களுணர்வுகளை...
நிச்சயமாக
இவர்களால்
அழிக்க முடியாது!

- சுரேஷ்

# பூவும் நீரும் கொண்டு பூசை செய்வோம்

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னயும் தந்தவன் இறைவன். உடம்பைத் தந்த இறைவனை ஒவ்வொருவரும் நன்றி மறவாமையின் பொருட்டு பூவும் நீரும் கொண்டு வழிபடவேண்டும். அப்படி நாள் தோறும் இறைவனை ஏத்திவழிபட்டால் தீயதெல்லாம் அழியும். துயரம் தீரும், இன்பம் பெருகும், வாழ்வு மலரும். இறைவனும் அதுகண்டு அருள்புரிவான்.

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு. அண்ணலும் அதுகண்டு அருள் செய்யா நிற்கும்.

பூஜை என்பதில் பூ— பூர்த்தி. ஜா-உண்டாக்குவது என்பதைக் குறிக்கும். மல மாயா சன்மங்களைப் பூர்த்தி செய்து, சிவ ஞானத்தை உண்டாக்கும் புனிதமான செயல் பூஜா எனப்படும். பூஜா என்பது பூஜை எனவந்தது.

பூஜைக்கு இருக்க வேண்டிய தகுதிகள் அன்பும் ஆசாரமுமாகும். அதற்குரிய முக்கியமான சாதனங்கள் பூவும் நீருமாம். எனவே பூஜையை எல்லாரும்மேற்கொள்ளலாம். இதனல், உடல் நலம், உளநலம், உணர்வு நலம் ஏற்படும். எண்ணங்கள் யாவும் கைகூடி கருமங்களைச் செய்து முடிக்கலாம். நாளும் இறைபுகழ் பாடி பூஜை செய்ய அருள் புரிய

**சமயம்**

வேண்டும். 'நாளும் உன் புகழே பாடி நானினி அன்புடன் ஆசார பூஜை செய்துய்ந்திட வீணாள் படாதருள் புரிவாயே' என்று அருணகிரியார் வேண்டுகிறார்.

கண்ண பிரான் சிவ பூஜை செய்தார். அர்ச்சுனன் சதா சிவபூஜை செய்தான். வசிட்டர், பராசரர் முதலிய மகரிஷிகள் சிவபூஜை செய்தனர். அம்பிகை சிவபூஜை செய்தாள், ஆனைமுகன் சிவபூஜை செய்தார். முருகப்பெருமான் சிவபூஜை செய்தார். அரசர்கள் சிவபூஜை செய்தார்கள்.

ஏன் அஃறிணை உயிர்களான பாம்பு, சிலந்தி யானை, எறும்பு, குரங்கு அணில், நண்டு முதலியனவும் சிவபூஜை செய்து உய்திபெற்றன. எனவே மானிடர்களாகிய நாம் ஏன் சிவபூஜை செய்யக்கூடாது. உண்டு உடுத்து, களித்து சிவ பூஜை செய்யாமல் காலங்கடத்தி காலன் வாய்ப்படும் மதியற்ற மானடரைக் கடிந்து பின்வருமாறு பாடுகின்றார் அதிவீரராமபாண்டியர்.

சிவகருமஞ் செய்யார்
திருநீறு சாத்தார்
தவ நிலையாஞ் சைவ
நெறி சாரார்—
அவனிதனில்,
கான்பரந்த பச்சைக்
களா நிழலைக்
கைதொழார்
ஏன்பிறந்தாய்
மானிடராய் இன்று!

மார்க்கண்டேயர் மறலியை வென்றது சிவ பூஜையினலன்றோ! உமா தேவியார் சிவபூஜையினல் இறைவனின் இடப்பாகத்தைப் பெற்றார். திருமால் சிவபூஜையால் பெருவாழ்வு பெற்றார். பிரமா சிவபூஜையால்உயர்நலம்பெற்றார்.

எனவே மனிதப்பிறவி எடுத்த நாம் இறைவனுடைய திருவடிகளைப் பூவும், நீரும்கொண்டு பூஜைசெய்து உள்ளம் குழைந்து உருகி நாள் தோறும் வழிபடவேண்டும். அதுவே ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி.

- பரமேஸ்வரி சிவராமலிங்கம் -

# விடுதலைப் போராட்டத்தில் வின்னி மண்டேலா பங்கு

விடுதலைப் போராட்டங்களில் பெண்களின் பங்களிப்பு முதன்மை பெற்று வருகின்றது. இது ஒரு சுபசகுனம். தென் ஆபிரிக்காவின் விடுதலைப் போராட்டம் உலக மக்களின் அனுதாபத்தைப் பெற்றுள்ளது. இப் போராட்டத்திற்கு வின்னி மண்டேலா அம்மையார் தன் வாழ்வையே அர்ப்பணித்துள்ளார்.

இவர் 1958 ஆம் ஆண்டு திரு. நெல்சன் மண்டேலாவை மணந்தார். அப்பொழுது அவருக்கு வயது 24. அவர்களின் கருத்து ஒருமைப்பாடு குடும்பப் பிணைப்பிற்கு இட்டுச் சென்றது.

அவர்களின் திருமண காலத்திலேயே திரு. மண்டேலா பொலீசாரினல் தேடப்பட்டவராக இருந்தார். திருமணமானவுடன் தலைமறைவானர். ஐரோப்பா, அல்ஜீரியா, சம்பியா போன்ற இடங்களில் வாழ்ந்து பின் நாடு திரும்பினர். நாடு திரும்பிய உடனேயே கைது செய்யப்பட்டுப் பின் ஆயுள் கைதியாக்கப்பட்டார்.

அவர்களின் இருபத்தெட்டு வருட மண வாழ்வில் இரு ஆண்டுகள் மட்டும் ஒன்ருக வாழ்ந்தார்கள். அவர்களுக்கு இரு புதல்விகள் இருக்கின்றார்கள்.

தென் ஆபிரிக்க அரசினல் பிரிக்கப்பட்ட குடும்பம் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப்பின் 1985 ஆம் ஆண்டு ஒரு சில தினங்களுக்கு ஒன்று சேரமுடிந்தது. இவ்வேளை திரு. மண்டேலா நோய் வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு கேப்ரவுணில் உள்ள ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை நடந்தது. பிள்ளைகளுக்கு தந்தையைக் காணும் வாய்ப்புக் கிட்டியது.

தந்தையின் அரவணைப்பில் வளரமுடியாவிட்டாலும் தந்தையின் கொள்கைக் காப்பாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

திரு. மண்டேலாசிறையில் அடைக்கப்பட்ட பொழுதும் அம்மையார் போராட்டத்தைத் தொடர்ந்தார். அவர் பலமுறை பொய்க் குற்றம் சாட்டப்பட்டார், கைது செய்யப்பட்டார், நாடு கடத்தப்பட்டார், வாக்குரிமை பறிக்கப்பட்டார்.

**பிரிந்தவர் கூடினர்**

இப்பொழுது அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆதலால் மீண்டும் போராட்டத்தைத் தொடர்கின்றார்.

அண்மையில் திரு. மண்டேலாவைச் சந்திக்கும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. ஆனல் அவர்கள் ஒலிவாங்கி மூலமாகத்தான் பேசக்கூடியதாக இருந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூடியதாக இருந்தபோதும் குண்டு துளைக்க முடியாத கண்ணடி அவர்களைப் பிரித்தது. அத்துடன் இரு பக்கங்களிலும் காவலாளிகளின் கண்காணிப்பும் இருந்தது.

இச்சந்திப்பு திரு. மண்டேலா அன்றுபோல் இன்றும் எண்ணங்களிலும் இலக்குகளிலும் உறுதியாக இருப்பதைப் புலப்படுத்தியது. இது அம்மையாருக்கு திருப்தியையும் பூரிப்பையும் ஏற்படுத்துகின்றது.

தற்போதைய இனவெறி அரசு தூக்கியெறியப்பட வேண்டும். அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். ஒரு ஜனநாயக அரசு கட்டியெழுப்பப்பட வேண்டும். அப்படியான அரசின் கீழ் பல்வேறு நிற மக்கள் மகிழ்ச்சியாக வாழக்கூடியதாக இருக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

- சி. இராமச்சந்திரா -

# காவிரி ஆற்றின் அழகைக் கோவலன் கூறும் பாங்கு

நீங்காத பெருஞ் சிறப்பினையுடையது புகார் நகரம். இங்கு தான் சிலப்பதிகாரம் உருவாகியது. சிலம்பு தமிழரின் தனிப்பெருஞ் செல்வம்; நெஞ்சை அள்ளும் சுவையுடையது. தேனிலே சேர்த்திழைத்த தித்திக்கும் தீஞ்சொல்லால் சீர்மையுடன், இனிமையுடன், எளிமையுடன், செழுமையுடன். செறிவுடன் அமைந்தது.

தமிழகத்தின் எம்மருங்கும் கற்ரேரால் போற்றப்பெறுவது சிலப்பதிகாரம். இத்தீஞ் சுவைக் காவியம் கற்குந்தோறும் உள்ளம் உவகையால் துள்ளும். உள்ளுந்தோறும் உவக்கும் கதை அமைப்பு. காதல்மணங் கமழும் கருத்தான சம்பவங்கள் செறிந்த நெஞ்சைத் தொடும் உரையாடல்களும் அதற்கே உரிய அலாதியான ஒரு சிறப்பு.

வரலாற்றுச் செய்திகள், தத்துவ உண்மைகள், வாழ்க்கைப் பிரச்சினைகள், மூவேந்தரின் வளமான ஆட்சிச் சிறப்பு, முத்தமிழின் வளர்ச்சி, அதன் இன்மை செழுமை, தன்னிகரற்ற உயர்வு, அறநெறி பேணும் அளவிலா உறுதிப்பாட்டினையுடைய அரசியலமைப்பு, நெறி தவரு மாண்பு என்பன ஆங்காங்கே பரந்து விரிந்து காணப்படுகின்றன.

இதிலே, காவிரிநதியின் சிறப்பம்சங்கள் இலக்கியரசனையுடன் வர்ணிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஓரிரு பகுதிகளை மட்டும் இங்கு நோக்குவோம்.

காவிரியாறு விநாயகப் பெருமானல் தோற்றுவிக்கப்பெற்ற சிறப்பினை உடையது. வளம்மிக்க இந்தக் காவிரியின் சிறப்பைக் கோவலன் சிறப்பித்துப் பாடுமாற்றைக் காவிய இலக்கிய நயத்துடன் படிக்கும்போது அளவிலா ஆனந்தம் கிட்டும்.

கோவலன் கையிலே யாழெடுத்து, மாதவியின் முன்பாக அமர்ந்து அதனை இசைக்கின்ருன். அப்போது காவிரியை ஒரு பெண்ணுக உருவகித்து இசைக்கின்ருன். 'புகழ்மாலை சூடிய திங்களைப்போன்று, புகழ் பெற்ற வெண்கொற்றக் குடையினை உடையவன் சோழன். அவன் தன் செங்கோலினைச் செலுத்திக் கங்கை நதியையும் விரும்பிச் சேர்ந்தான். அதனலும் நீ அவனை வெறுக்க மாட்டாய். காவேரி! கயற்கண்ணய்! கங்கையைப் புணர்ந்தாலும் நீ அவனை வெறுக்காதிருப்பது ஏன் தெரியுமா? காதலுடைய மாதரின் பெருமைமிக்க கற்புநெறியின் தன்மையே, நீ வாழ்க.

'கங்கை தன்னைப் புணர்ந்தாலும், புலவாய் வாழி காவேரி' என்பது பாடல்வரி.

பெருமை பொருந்திய புகழ்மாலையினை அணிந்த வெண்கொற்றக் குடையையுடையவன் சோழமன்னவன். அவன் தன் செங்கோலின் ஆற்றலால்-குமரியையும் கூடினன். அதனலும்நீஅவனை வெறுக்கமாட்டாய்.

உழவரின் ஏர் மங்கல ஓசையும் மதகிலே நீர் வடிகின்ற ஓசையும் வரப்புகளை உடைத்துப் பாய்கின்ற நீரின் ஓசையும் புதுப்புனல் விழாக் கொண்டாடும் மக்களின் மகிழ்ச்சி ஆரவார ஓசையும் எம்மருங்கும் ஆர்ப்பரிக்க நடந்து அசைந்து ஓடிவருபவள் நீ.

கண்ணெனக் கலையும் புருவம் என்று வில்லினையும் கூந்தல் எனக் கார் மேகத்தையும் எண்ணி இவள் முகம் திங்கள் தானே என ஐயுறும்படி நுரைத்துச் சிதறிச் சிரித்தவண்ணம் வருகின்ருள் காவேரிப்பெண். இருபக்கத்தும் வண்டுகள் மிகுதியாக ஆர்ப்பரிக்க, அழகிய பூவின் ஆடையைப் போர்த்துக் கொண்டு, கயல் மீன்களாகிய கண்விழித்து நீ அசைந்து நடந்தனை. கருங்கயல் போன்ற கண்களை விழித்து அசைந்தசைந்து நீ நடந்ததெல்லாம் நின் கணவனின் திருந்திய செங்கோல் வளையாமைப் பொருட்டோம் என்பதனை நான் அறிவேன். நடந்தாய் வாழி காவேரி.

பூக்கள் மலிந்த சோலையிலே மயில்கள் ஆடும். குயில்கள் தாமே விரும்பி இன்னிசைபாடும். இவற்

**இலக்கியம்**

றினூடே நீயும் நடந்தாய் காவிரியே நீ நடந்தாய் வாழி.

'பூவர் சோலை
மயில் ஆலப்
புரிந்து குயில்கள்
இசைபாடக்
காமர் மாலை
அருகு அசைய
நடந்தாய் வாழி
காவேரி!'
என்பது பாடல்..

நல்ல முத்தாலாகிய மாலையினை அணிந்தும், பவளத்தால் அமைந்த மேகலாபரணத்தை உடுத்தியும் செந்நெற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

- இராசையா ஸ்ரீதரன் -

# உடலுக்கு உறுதி தருகின்ற கீரைவகைகள் பல ரகம்; பயன்களும் பலவிதம்

மனிதனது ஆயுள் நூறு ஆண்டுகள் என்பது எல்லோரும் அறிந்தது. சிலர் நூறு ஆண்டுகளுக்கு மேலும் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். பலர் அந்த நூறு ஆண்டுகள் வரை வாழாமல் அதற்கு முன்னமேயே மறைவதையும் பார்க்கின்றோம். இதன் காரணம் என்ன? ஏன் மிகக் குறைந்த வயதிலேயே இறக்கின்றனர் என்பதை நாம் ஆராய வேண்டும். இதை ஆராய்ந்து பார்த்த அறிஞர்களும் உடலியல் மருத்துவர்களும் நாம் சரியான முறையில் உடலைப் பாதுகாக்கத் தவறுகிறோம் என்று கூறுகிறார்கள்.

உடலை எப்படி எப்படிப் பாதுகாக்க வேண்டும் என்பதை ஞானிகளும் சித்தர்களும் பழைய நூல்களில் கூறியுள்ளார்கள். உடலுக்கு உறுதியைத் தருவது கீரைகள் தான் என்பதை மருத்துவர்களும் கூறுகின்றனர். எந்த மருத்துவரும் கீரையைச் சேர்க்காதீர்கள் என்று கூறுவதில்லை. ஒவ்வொரு நாளும் கீரையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கீரையில் இல்லாத சத்துக்களே கிடையாது. எல்லா வைட்டமின் சத்துக்களும் கீரையில் இருக்கின்றன. ஆகவே ஒவ்வொருவரும் தமது உணவுடன் கீரைகளைச் சேர்த்தே உண்ண வேண்டும்.

இயற்கை அளித்த எளிய உணவுப்பொருள் கீரைகள். எங்கும் மிக மிக மலிவாகக்கிடைக்கக் கூடியவை கீரைகள். பல வகையான கீரைகளைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். இங்கு சில கீரை வகைகளையும் அதன் குணங்களையும், அதன் பயன்களையும் காண்போம்.

**அகத்திக்கீரை**

இக்கீரையில் 63 வகைச் சத்துக்கள் அடங்கி உள்ளன. புரதச் சத்தும் சுண்ணும்புச் சத்தும் இதில் அதிக அளவு உள்ளன. இது உயிர்ச்சத்துக்கள் நிறைந்த கீரை. தொண்டைப் புண், தொண்டை வலிக்கு இக்கீரை சிறந்த மருந்தாகும். மலச்சிக்கலைப் போக்கும் தன்மை இதற்கு உண்டு. இக்கீரையில் அளவுக்கு மீறிய சத்துக்கள் இருப்பதால் இதை வாரம் ஒரு முறை மட்டும் சேர்த்துக் கொள்வது நல்லது.

**கரிசலாங்கண்ணி**

மிகப் பழங்காலம் முதல் இக்கீரை இந்திய மருத்துவத்தில் இடம் பெற்றிருக்கிறது. இரத்தத்தைச் சுத்தம் செய்கிறது. இது கண்ணின் ஒளியைக் கூர்மையாக்குகிறது. தோல் வியாதிகளுக்கு இது மருந்தாகப் பயன்படுகிறது. இதன் இலையாலும் தண்டாலும் பல் துலக்கினால் பல்லில் ஏற்படும் ஈறு வீக்கம் நீங்கும்.

**முருங்கைக் கீரை**

இக்கீரையில் சிறந்த உயிர்ச்சத்துக்களும் தாது உப்புக்களும் இரும்புச் சத்துக்களும் உள்ளன. வைட்டமின் 'சி' சத்து இக்கீரையில் போதிய அளவு உள்ளது. நமது உடலில் உள்ள அண்ணரசத் தாது, இரத்தம், ஊன், மூளை, அஸ்தி, மேதஸ், சுக்கிலம் என்ற எழுவகைத் தாதுக்களின் சூட்டை இது தணிக்கும். நெஞ்சில் உள்ள கோளையை அகற்றும். சிறு நீரைப் பெருக்கும். நீரிழிவு நோயை நீக்கும் ஆற்றல் இக்கீரைக்கு உண்டு. இரத்தத்தை விருத்தி செய்யும்.

**வல்லாரை**

வல்லாரைக்கீரை வல்லமை பொருந்திய கீரையாகும். இது சிறந்த உணவாகும். உயர்ந்த மருந்தாகவும் பயன்படுகிறது. இதை வாரம் ஒரு முறை மட்டும் சேர்த்துக் கொள்வது நல்லது. தோல், நரம்பு, இரத்தம் சம்பந்தப்பட்ட நோய்களை இது நீக்குகிறது. வயிற்றில் ஏற்படும் புண்ணை ஆற்ற வல்லது இக்கீரை. பல்லில் படிந்துள்ள மஞ்சள் நிறம் இந்த இலையால் பல் தேய்த்தால் அந்நிறம் மாறிப் பல் வெண்மையாகும். இக்கீரை மூளைக்கு நல்ல பலத்தையும் சுறுசுறுப்பையும் தரும். சிந்தனை சக்தியைப் பெருக்கும். ஞாபக சக்திக்கு இதைவிட வேறு மருந்தே இல்லை.

**தண்டுக்கீரை**

இக்கீரை பித்தத்தைத் தணிக்கும். வயிற்றுக் கடுப்பு, இரத்தபேதி முதலியவைகளைப் போக்கும். இதன் தண்டே மிகச் சிறந்த உணவாகக் கருதப்படுகிறது. 100 கிராம் கீரையில் 173 மில்லி கிராம் வைட்டமின் 'சி' இருக்கிறது. கீரைகளுக்கு உள்ள எல்லாக் குணங்களும் இக்கீரைத் தண்டுக்கு அமைந்திருக்கிறது.

**பொன்னாங்காணிக் கீரை**

இக்கீரை கண்ணுக்கு மிகவும் நல்லது. இதை உண்பதால் வாய்ப்புண், வாய் நாற்றம் நீங்கும். நமது உடலைப்பொன்நிறமாக்கும் தன்மை இக்கீரைக்கு உண்டு.

(6-ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:- க. கனகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் புதிதாக, புதுமையாக இன்னும் செய்ய விரும்புகிறேன்

## மூத்த எழுத்தாளர் வரதர் சொல்கிறார்



* * *
''மறுமலர்ச்சி இலக்கிய காலத்துக்குப் பின்பு தான் எழுத்தாளர் என்ற இனமே தோன்றிற்று. புதிய இலக்கியங்களும் பெருந்தொகையாக வெளிவரத் தொடங்கின''.
* * *

கேள்வி:- ''வரதர் வெளியீடு'' என்ற பெயரில் பல நூல்களை வெளியிட்டு வருகின்றீர்களே. நூல்களை வெளியிடவும், அதற்கு வரதர் வெளியீடு என்றும் பெயர் சூட்டவும் காரணமாக அமைந்தவை எவை?

பதில்:- 1940ஆம்ஆண்டளவில் நாவலர் வரலாற்றுச் சுருக்கத்தை 'நாவலர்கோன்' என்றபெயரில் நானே எழுதிச் சிறுநூலாக அச்சிட்டு வெளியிட்டேன். வரதர் வெளியீடாக பல நூல்கள் இதுவரை வெளிவந்தாலும் முதன்முதல் அப்பெயரில் வெளியிடப்பட்டநூல் 'நாவலர்' தான்.

அந்த நாட்களில் தமிழ்நாட்டில் நவயுகப் பிரசுராலயம், அல்லயன்ஸ் கம்பனி, கலைமகள் பிரசுராலயம் இராமுலு பிரசுரங்கள் என்ற பலநூல் வெளியீட்டகங்கள் நூல்களை அச்சிட்டு வெளியிட்டு வந்தன. அவற்றைப்போல நூல்களைத்தொடர்ந்து வெளியிடுவதற்கு ஈழத்திலும் ஒரு வெளியீட்டகம் வேண்டும் என்று அப்போது நான் கருதினேன். அந்த எண்ணத்தை நிறைவுசெய்யும் நோக்குடன்தான் 'நாவலர்' என்ற நூலை முதன் முதல் வெளியிட்டேன். அதனைத்தொடர்ந்து பல நூல்களை வெளியிட்டும் வருகிறேன்.

கேள்வி:- நாவலரைத் தொடர்ந்து நீங்கள் வெளியிட்ட பதிப்புக்களில்பிரபல்யம் வாய்ந்த நூல்கள்பற்றி கூறலாமா?

பதில்:- நாவலரைத் தொடர்ந்து அவ்வப்போது பல நூல்களை வெளியிட்டிருக்கிறேன். எனது சிறுகதைகளின் தொகுதியான 'கயமை மயக்கம்', நானே உரை எழுதிய 'திருக்குறளும் பொழிப்புரையும்' மலிவுப் பதிப்பு முதலிய நூல்களையும், நாவற்குழியூர் நடராசன் எழுதிய கவிதைத் தொகுதியான 'சிலம்பொலி', மஹாகவியின் 'வள்ளி' முதலிய நூல்களையும் பிரபல்யம் வாய்ந்தவையாகக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் சிலகட்டுரைகளை திரு. கனக செந்திநாதன் தொகுத்துத் தந்தார். அதனை 'இலக்கியவழி' என்ற பெயரில் வெளியிட்டேன். பண்டிதமணியின் கட்டுரைகள் முதன்முதலாக நூலுருவில் வெளியிட்ட பெருமை வரதர் வெளியீட்டுக்கே சேரும்.

### ஒரு சாதனை

கேள்வி:, வரதர் வெளியீடுகளை வெளியிடுவதற்கு இலாபநோக்கு ஒரு காரணமெனக் கூறலாமா?

பதில்:- இலக்கிய வளர்ச்சி நோக்கியும், எழுத்தாளர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரவும் இலக்கிய சேவையாகவும் கருதிச் செயற்பட்டாலும், ஓரளவு இலாபநோக்கும் இல்லாமல் இல்லை. பாடசாலை மாணவர்களுக்கு உபயோகமான பலநூல்களை வரதர் வெளியீடாக்கியுள்ளேன். மாணவர்களுக்காக வெளியிட்ட இந்நூல்கள்மூலம் எனக்கு பொருள் ஆதாயமும் கிடைத்தது மறுக்கமுடியாதது.

கேள்வி:- தங்கள் வெளியீடுகளில் மக்களிடையே பேராதரவையும் விற்பனையில் சாதனைகளையும் புரிந்த நூல்கள் ஏதாவது உண்டா?

பதில்:- இலங்கை இனப்பிரச்சினை ஆரம்பித்தகாலத்தில், '24மணிநேரம்', 'யாழ்ப்பாணம் எரிகிறது' என்ற இருநூல்களை வெளியிட்டேன். இவை இரண்டும் 'நீலவாணன்' எழுதியவை. இந்த இருநூல்களும் ஈழத்துப்புத்தக வெளியீட்டுத் துறையில் ஒரு சாதனையை ஏற்படுத்தின எனக் கூறலாம்.

### மனத்துயர்

கேள்வி:- இலக்கிய வெளியீட்டுத்துறையில் உங்களை மகிழ்விக்கக்கூடிய அல்லது வருத்தத்துக்குரிய நிகழ்ச்சிகள் ஏதாவது...?

பதில்:- மகிழ்ச்சிதரக்கூடிய பல நிகழ்ச்சிகள் இருப்பினும், மனவேதனையை ஏற்படுத்திய நிகழ்ச்சி ஒன்றைக் கூறலாம். தமிழில் ஒரு டிரக்டரி (களஞ்சியம்) வெளியிட வேண்டுமெனப் பலபெரு முயற்சிகள் செய்தேன். 'வரதரின் பலகுறிப்பு' என்ற பெயரில் அதை வெளியிட்டேன். மிகுந்த பிரயாசையின் பெயரில் அதன் நான்கு பதிப்புக்களை மட்டுமே வெளியிட முடிந்தது. அதற்குமேல் அதனைத் தொடர்ந்து வெளியிடப் பல வசதியீனங்கள் ஏற்பட்டுவிட்டன. இது எனது மனவருத்தத்துக்குரிய ஒரு நிலையாகும்.

கேள்வி:- இது ஒரு 'வரதர் வெளியீடு' என்ற சிறப்பு முத்திரை மக்கள் மத்தியில் பதிந்துவிட்டதே - அதற்குக் காரணம் என்னவாக இருக்கலாம்?

பதில்:- உங்கள் கேள்வியிலிருந்து வரதர் வெளியீட்டுக்கு வாசகர் மத்தியில் ஒரு மதிப்பு இருக்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் வரதர் வெளியீடு இதுவரை செய்தது போதாது; தமிழில் புதிதாக, புதுமையாக இன்னும் நிறையச்செய்ய வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

ஒரு எழுத்தாளனின் பெயர் வாசகர் மனதில் பதிந்துள்ளதென்றால் அதற்கு அவருடைய சிறப்பான, தொகையான ஆக்கங்களே காரணம். அதுபோலத்தான் பல நூல்களை வெளியிட்டமையும், அவையாவும் தரமான வெளியீடுகளாகவும் அமைந்தமையுமே மக்கள் மனதில் வரதர் வெளியீடு என்ற முத்திரை பதியக் காரணமாகின எனக்கூறலாம். அத்துடன் பல்வேறு வகைப்பட்ட வாசகர்களுக்கும் வரதர் வெளியீடுகள், நூல்கள் ஏற்றனவாய் அமைந்ததையும் கருத்தில்கொள்ள வேண்டும். பாட நூல்கள் வெளியிட்டதன் காரணமாக மாணவர் மத்தியிலும் இந்தப் பெயர் நன்கு பதியலாயிற்று. அன்றைய மாணவர்களில் பலர் இன்று நல்லவாசகராகவும் ஆக்க இலக்கியகாரராகவும் மாறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கவை'

### மறுமலர்ச்சிக்காலம்

கேள்வி:- மறுமலர்ச்சிக்கால எழுத்தாளராக நீங்கள் விளங்குகிறீர்கள், மறுமலர்ச்சிக்கால அனுபவங்கள் பற்றிகூற முடியுமா?

பதில்:- என்னுடைய நினைவாற்றல் படுமோசம் என்பதை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனது நினைவாற்றல் மட்டும் நன்றாக இருக்குமானால் 'மறுமலர்ச்சிக் காலம்' என்ற ஒருநூலே எழுதி வரதர் வெளியீடாக்கியிருப்பேன்.

அத்தனை ஆர்வத்துடன் நாங்கள் இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்த காலம் அது, மிகுந்த உற்சாகத்தோடு உழைத்தகாலம். சில இலக்கிய நண்பர்கள் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' ஒன்றைத் தோற்றுவித்தனர். சங்க உறுப்பினர் சிலர் சேர்ந்து 'மறுமலர்ச்சி' என்ற சஞ்சிகையையும் நடத்தினர். செய்யுள் வடிவத்திலமைந்த பழந்தமிழ் இலக்கியங்கள் மட்டுமல்ல; புதிதாகத் தமிழில் வெளிவரத் தொடங்கியிருந்த சிறுகதை, நாவல் போன்றனவும் இதன் இலக்கியங்களே என்று நிறுவப் புறப்பட்டவர்களே மறுமலர்ச்சி இலக்கிய நண்பர்கள்,

கேள்வி:- மறுமலர்ச்சிக் காலத்துப் படைப்புக்கள் அதற்கு முன்னைய காலப் படைப்புகளைவிட எந்தவகையில் வேறுபட்டு அமைந்தன?

பதில்:- மறுமலர்ச்சி இலக்கிய காலத்திற்கு முன்பு பொதுவாக 'எழுத்தாளன் என்ற பெயரே இருக்கவில்லை எனக்கூறலாம். பண்டிதர், வித்துவான் போன்ற அறிஞர்கள் நூல்களை — இலக்கியங்களை எழுதினார்கள். அவர்களை 'நூலாசிரியன்'' என்றே மக்கள் குறிப்பிட்டார்கள். சிறுகதை, நாவல் என்பன அந்தக்காலத்தில் பரவலாக எழுதப்படவில்லை. ஏதோ ஒன்றிரண்டு வந்திருந்தாலும் அவை 'இலக்கிய அந்தஸ்துப் பெறவில்லை.

மறுமலர்ச்சி இலக்கிய காலத்துக்குப் பின்பு தான் எழுத்தாளர் என்ற இனமே தோன்றிற்று. புதிய இலக்கியங்களும் பெருந்தொகையாக வெளிவரத்தொடங்கின.

கேள்வி:- எழுத்துத் துறையில் புதுமை செய்யப்புறப்பட்ட மறுமலர்ச்சிச் சங்கம் பின்னால் மறைந்துபோகக் காரணம் என்ன? மறு

பதில்:- எத்தனையோ பல நிறுவனங்களைப் போலவே மறுமலர்ச்சிச் சங்கமும் காலத்தால் மறைந்ததென்றே சொல்லவேண்டும்.

கே:- அக்காலத்தில் ஈழகேசரி என்று ஒரு வார வெளியீடுவந்ததே. அதற்கும் மறுமலர்ச்சிக்கும் தொடர்பு உண்டா?

பதில்:- தொடர்பு என்று குறிப்பிடுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் மறுமலர்ச்சியின் தாய் என்று ஈழகேசரியைக் கூறலாம். மறுமலர்ச்சி இலக்கிய நண்பர்களில் பெரும்பாலானோர் ஈழகேசரிப் பண்ணையில் பிறந்து வளர்ந்தவர்களே. ஈழகேசரியின்ஆசிரியராக இருந்த திரு. சோ. சிவபாதசுந்தரம், அவருக்குப் பின்வந்த திரு. இராஜ. அரியரத்தினம் ஆகிய இருவருமே புதிய மறுமலர்ச்சி இலக்கிய எழுத்தாளர்களைத் தட்டிக்கொடுத்துவளர்த்தவர்கள் என்பதை எவரும் மறுக்கவோ-மறைக்கவோமுடியாது.

கேள்வி:- மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் இன்னும் தங்கள் மனதில் நிலைத்து நிற்பவர்கள் பற்றி...?

பதில்:- பலரைக் குறிப்பிடலாம். எனினும் குறிப்பாக அ. செ. முருகானந்தம், கனக.செந்திநாதன், நாவற்குழியூர் நடராசன், பண்டிதர். ச. பஞ்சாட்சர சர்மா ஆகியோரை எளிதில் மறக்கமுடியாது. ★

செவ்வி: வி. பி. சர்மா

---

# உழைப்பை நம்பும் கிருஷ்ணஐயர்

''காதல் புரிவதற்கும் சேவை செய்வதற்கும் வயது ஒரு தடையல்ல.

72 வயது இளைஞனை எனது வெற்றிக்குக் காரணமானதும்,எனக்கு மகிழ்ச்சியைத் தருவதும் எது தெரியுமா?

ஒன்று - உழைப்பு
இரண்டு - உழைப்பு
மூன்று - உழைப்பு

இந்திய ஜனதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக குதித்துள்ள முன்னாள் சுப்பிறீம் கோட் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யரே இப்படிக் கூறுகின்றார்.

இவர் 1915ஆம் ஆண்டு நவம்பரில் பாலக்காட்டில் பிறந்தவர். கிராமத்திலிருக்கும் பள்ளியிலும், சிறிய நகரொன்றின் உயர் நிலைப்பள்ளியிலும் ஆரம்பக் கல்வியைக் கற்றவர்.

### சிறைவாசம்

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் விவசாயிகள், தொழிலாளர்களுக்கெதிரான அநீதிகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வழிகாட்டியவர். அக்காலத்தில் அரசியல் குழுக்களுக்கான சட்ட ஆலோசகராக இருந்ததால் 1942 இல் சிறை சென்றார்.

சுதந்திரத்தின் பின் வந்த முதல் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று 56 வரை தலைச்சேரியில் சுயேச்சையாகத் தெரிவானார்.

1957 இல் கேரள சட்டசபைக்குத் தெரிவாகி சமூக நலம், சட்டம் மின்சாரம், நீர்ப்பாசனத் துறைகளின் அமைச்சராகக்கடமையாற்றினார்.

1968ல் கேரளாவில் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இந்தியாவின் முதல் பெண் நீதிபதியான அண்ணா சாண்டியை நியமித்து தமது புரட்சிகரமனப்பாங்கை வெளிப்படுத்தினார்.

1973 ல் சுப்பிரீம் கோர்ட் நீதிபதியாக — அப்போதைய ஜனதிபதி கிரியால் நியமிக்கப்பட்டார்.

### விருது

இந்தோ - சோவியத் கலாசார அவையின் அங்கத்தவராக இருந்த தோடல்லாமல், சோவியத் நாட்டின் 'நேரு' விருதையும் 1968இல் பெற்றுக் கொண்டார்.

நீதித்துறையில் இன்று மலிந்துள்ள ஊழல்கள் முற்றாக ஒழிக்கவும், ஆதிவாசிகள், ஆதிதிராவிடர், பெண்கள், கைதிகள், ஆகியோரின் உரிமைகளுக்குக் குரல் கொடுப்பவர். ஈழம், பஞ்சாப் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கவும் தான் பாடுபடுவதாக அவர் கூறியுள்ளார்.

- ரட்ணா -

இந்த முதிய வயதிலும் பல போராட்டங்களில் பங்கு பற்றிய அவர் அது பற்றிக் கருத்துக் கூறுகையில்:-

''முதுமை ஒரு சாபமல்ல, முதியோர்களுக்கு முகன் சொல்வதெல்லாம் முகட்டு வளையை வெறித்துப் பார்த்தபடி உங்களைப் பற்றியே நீங்கள் சிந்தித்துக் கொண்டிருந்தால் வெறுமை தான் மிஞ்சும். மனிதன் இயங்கிக் கொண்டிருக்கவேண்டும்.

**என் மரணம் வரை மக்களுக்காக ஓய்வின்றி உழைக்க விரும்புகிறேன்.**
**—இது இந்திய ஜனதிபதித் தேர்தலின் எதிர்க்கட்சி வேட்பாளர் கிருஷ்ண ஐயரின் துணிவு.**

என் மரணத்தின் முன் நிமிஷம் வரை மக்களுக்காக ஓய்வின்றி உழைக்கவே நினைக்கின்றேன்.-

இப்படிக் கூறியிருக்கிறார் அந்த 72 வயது இளைஞரான இந்திய ஜனதிபதி தேர்தலின் எதிர்க்கட்சி வேட்பாளர்; கிருஷ்ணஐயர். ★

---

## விடுதலைப் ..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

—இது அம்மையாரின் குறிக்கோள். இது ஒவ்வொரு தென் ஆபிரிக்க விடுதலை வீரனுடைய நோக்கமும் கூட.

இவ்விலக்கை நோக்கிய செயற்பாடுகள் வலுவடைகின்றன. அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. மக்களின் உறுதி தளரவில்லை. மக்கள் குழுக்கள் அமைக்கின்றார்கள்; நீதிமன்றுகள் அமைக்கின்றார்கள். நிலவாத அடக்குமுறை அரசைத் தோற்கடித்து அதிகாரத்தைக் கைப்பற்றும் தீர்மானத்துடன் மக்கள் பெருமளவில் அணிதிரள்கின்றார்கள் — இவ்வாறு அம்மையார் தென் ஆபிரிக்க நிலையை மதிப்பிடுகின்றார். ★

## கீரைவகை---

(5ஆம் பக்க தொடர்ச்சி)

இயற்கை மருத்துவத்தில் காயகல்பமூலிகை என்று இதைச் சொல்வார்கள். இது வாததோஷம்; தேகச்சூடு முதலிய வியாதிகளை நீக்கும். மூலச்சூடு, கை கால் எரிவு ஆகியவைகளைக் கண்டிக்கும்.

### முளைக்கீரை

இக்கீரையில் மட்டுமே எல்லா விதமான தாதுப்புகளும் அடங்கியுள்ளன. இதில் உள்ள மணிச்சத்து மூளை வளர்ச்சிக்கு ஏற்ற உணவுச் சத்தாகும். இது நல்ல பசியைக் கொடுக்கும். சொறி, சிரங்கு முதலிய நோய்கள் இதை உண்பதனால் குணமாகும். இது வெப்ப சுரத்தைத் தணிக்கும். இக்கீரையைக் குழந்தை முதல் பெரியோர் வரை அனைவரும் உண்ணலாம்.

## காவிரி...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

பயிர்களையுடைய கழனிகள் தோறும் உலாவ வருகின்ற காவேரியே நீ வாழ்க. புதிய முழுமதி போன்ற முகத்தினை உடையவளே! ஓடிவருகின்ற வேகத்தில் நீ என்னவெல்லாம் பார்த்தாய். அழகிய இளம் கன்னியர் உன்னில் குளிக்கின்றனர். நீபட்டதால் அவர்கள் பாவம்தான் குறையும். ஆதலினால் காவிரிப் பெண்ணே நீ பாவம் போக்கும் பரிதியாகவும் மிளிர்கின்றாய்.

உன்னுடலில் எத்தனை விதமான அணிகலங்கள் முத்துக்கள், பவளங்கள், நீலங்கள், அகிற்கட்டைகள், சந்தனக்கட்டைகள் யாவும் நீ தந்த செல்வம் அல்லவா.

நடந்தாய் வாழி காவேரி!

—இப்படிக் கோவலன் காவேரியை வர்ணிக்கிறார்.

நயம் நிறைந்த இந்தக் காட்சிகள் படிக்குந்தோறும் இன்பம் பயப்பவை. இன்பம் சுமந்து வரும் காவேரியாறு கலைகள் வளரவும் உறைவிடமாய் விளங்குகிறது. அதன் பெருமை சொல்லில் அடங்கா. ★

---

# கிராமமே இடம் பெயர்ந்தது; சகல வசதியும் சங்கானையில்

**தாம்** வாழ்ந்த நிலையில் தடுமாறி, திக்கற்றவர்களாய்த் தவிக்கும் அந்தப் பெருங்கூட்டத்தில், 'சிலர் சிரிப்பார்; சிலர் அழுவார்; நாம் சிரித்துக்கொண்டே அழுகின்றோம்' எனக் கூறி, வாடிப்போன வதனத்தில் கூட ஒரு வரட்சியான சிரிப்பை வரவழைத்துத் தம் துன்ப நிகழ்வுகளை என்னுடன் பகிர்ந்து கொள்வதில் ஆர்வம் காட்டினார் அந்த இளைஞர்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கூடியுள்ள அகதிகளைப் பார்க்கச் சென்ற எனக்குப் பல சுவையான நிகழ்ச்சிகள் காத்திருந்தன.

தாமுண்டு, தம் குடும்பமுண்டு, தம் இனம் உண்டு. கிராமமே ஒன்றுகியுண்டு என்ற நிலையில் ஓரினமாக, ஒற்றுமையாக வாழ்ந்திருந்தது மாவகலட்டி கிராமம்.

கீரிமலைக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடையில் 186 குடும்பங்களைக் கொண்டு அமைதியாக ஆறுதலாக இருந்த கிராமம் மாவகலட்டி.

ஜூன் 7 ஆம் திகதி. யாழ்ப்பாணம் வானொலியின் ஊரடங்கு உத்தரவு, உறங்கியிருந்த மக்களை விழிப்படைய வைத்தது. இராணுவ கெடுபிடிகள் அக்கிராமத்தைக் கலங்க வைத்தன.

உடுத்த உடையுடன் அகப்பட்டதைக் கையில் எடுத்துக்கொண்டு, ஓட்டமும் நடையுமாக ஓடோடி வந்த மக்களைச் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் கை நீட்டித் தன்னகத்தே தடுத்துக் கொண்டது.

ஒரு கிராமமே அம் மகா வித்தியாலயத்துள் அடங்கியது. ஒருவரோடொருவர் உறவினர்களான பிரிக்க முடியாத அக்கிராமம் இங்கும் ஒன்றாகவே தங்கியுள்ளது. 186 குடும்பம்! 867 மனித உயிர்கள்!

### திருமணம்

கல்யாணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுவதாகக் கூறுவர். ஆனால் அகதிமுகாமில் கூட கல்யாண நிகழ்வுகள் நிகழும் சுவையான சம்பவமும் இங்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நிச்சயிக்[illegible] பேச்சு. திடீரென அகதி[illegible] பெண். காதலின் வேகம் —யான் இருக்க என் காதலி அகதியாவதா?- என்ற மாப்பிள்ளையின் சிந்தனை மிடுக்கு. இவை அனைத்தும் அந்த முகாமில் அச்சோடியை ஒன்று சேர்த்து விட்டது.

திருமணம் செய்து கொண்ட துடிப்பில் துணைவி கிராமத்துக்கு தன் துணையை அழைத்துச் சென்றான் மாப்பிள்ளை. தேனீர்ச் செலவு கூட இன்றித் திருமணத்தை நடத்தி முடித்துவிட்ட திருப்தியில் திளைத்து நின்றனர் பெண்ணின் பெற்றோர்!

'அப்போ சீதனம்?...? என் சிந்தனை கேள்வியாக உருவெடுத்தது.

'அதைப்பற்றி இப்போ என்ன அவசரம். கையில் ஒன்றிரண்டு வந்த பிறகல்லவா அந்தப் பிரச்சினை' முதியவர் ஒருவரின் அனுபவம் வாய்மொழியாகத் தாம் அகதிகள் என்ற நிலை கூட மறந்து கொல்லென்ற சிரிப்பொலியை எழுப்பினர் என்னைச் சூழ்ந்து நின்ற கூட்டத்தினர்.

### மனநோயாளி

[illegible] வைரவன் மாணிக்கம் — வெள்ளைச்சி என்ற குடும்பம் ஒன்றை விட்டு விட்டதாக கூறினர். மாணிக்கத்துக்கு மனக்குழப்பம். மனநோயாளி. ஆமி வாறான் என்பதையும் சிரிப்பாக எடுத்துக் கொண்டு அங்கு தங்கி விட்டார். மனைவி வெள்ளைச்சியும் கணவனுடன் தங்கி விட்டாள்.

இப்போ அவர்கள் நிலை எப்படி? போய்ப் பார்த்தீர்களா? எனக் கேட்டேன்.

தாம் ஒருமுறை போன போது வெள்ளைச்சி மட்டுமே இருந்தாள். மாணிக்கம் ஒரு நாள் வீட்டைவிட்டு வெளியே போனவர் திரும்பி வரவில்லையாம். ஆமிபிடித்தானோ? ஆண்டவன் பிடித்தானோ?

குடாநாட்டில் இன்று வீடுகள் தோறும் அகதிகள்.


ஆனால்! மக்கள் அவர்களுக்கு அளித்து வரும் அன்பு, ஆதரவு அரவணைப்புகள் மூலம் அவர்கள் எவருமே அகதிகள் அல்லர்; எல்லோரும் ஓர் மக்கள், ஓரினம், ஓரே சாதி;

'அதுதான் தமிழ்ச் சாதி' என்பதை நிரூபித்து வருகின்றனர். ★

தொகுப்பு:-
- பூர்ணா -

---

எட்டாம் திகதி
குடமுழுக்கு
விழா



# கடையிற் சுவாமிகள் காட்டும் நிட்டைப் பேறு

**நம்** நாட்டின் வரலாற்றிலே சிவவழிபாடு இராவணன் காலத்திற்கும் முற்பட்டதாகும். இதனைச் சென்ற நூற்றுண்டிலும் இந்நூற்றுண்டிலும் சிறப்புற விளக்கிய பெருமை கடையிற்சுவாமிகளை முதல்வராகக் கொண்ட செல்லப்பா சுவாமிகள், சிவயோக சுவாமிகள் குழந்தைவேற் சுவாமிகள் முதலிய சித்தர் பரம்பரையினர்க்கு உரியதாகும். சித்தர் சிவமே யாவர். பித்தர் நிலையடைந்த முத்தராவர். யாழ்ப்பாணம் பெரிய கடையில் அருள் நடனத் திருவிளையாடல்கள் பல புரிந்தவர் கடையிற்சுவாமிகள். அவரின் அரும்பெரும் அற்புத நிகழ்ச்சிகள் பற்பலவாகும். சுவாமிகளின் சமாதிச் சிவாலயம் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நீராவியடியில் குன்று அருளும் அழகும் திகழும் திருக்கோயிலாக இலங்குகின்றது. வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமானை நாடோறும் பக்தி சிரத்தையுடன் அடியார்கள் வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்று வருகின்றனர்.

புதிதாகத் தட்சணாமூர்த்திக்கு தனிக்கோயிலும் நவக்கிரகங்களுக்குத் தனிக்கோயிலும் கட்டப்பெற்றுக் குடமுழுக்கு இம்மாதம் 8 ஆம் திகதி நிகழ்கின்றது. நம்மை இன்று பிடித்துள்ள இன்னல்களிலிருந்து விடுதலை பெற இந்நிகழ்ச்சி துணை புரியுமெனப் பக்தகோடிகள் நம்புகின்றார்கள். சிவவழிபாடும் குருவழிபாடும் இன்றைய தேவையாகும்.

இத்தலத்தில், ஞானத்தின் பெருநிலை கண்ட

(7 ஆம் பக்கம் பார்க்க)

★ க. கணபதிப்பிள்ளை ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் மற்றும் நீதி விசாரணைத் துறைகளில் துப்புக்களைத் துலக்குவதில் விஞ்ஞானம் ஆற்றிவரும் பங்கு அளப்பரியது.

கைரேகையை அடையாளம் காணும் முறைமுதல் நீதி விசாரணைத்துறையில் விஞ்ஞானம் நிலைநாட்டியுள்ள சாதனைகள் பல.

அந்தவகையில், (மருத்துவம் சார்ந்த சட்டவியல்) (Medico - Legal) மூலம் உலக நீதி மன்ற வரலாற்றில் பல ஆச்சரியப்படத்தக்க நிகழ்வுகளைச் செய்துகாட்டியவர் மருத்துவ மேதை சேர். சிட்னி ஸ்மித்.

மக்கிப்போன சிலதுண்டு எலும்புகளை மட்டும் வைத்துக்கொண்டு, மூடிமறைக்கப்பட்ட பெரும் கொடூர, கொலைச்சம்பவங்களை அம்பலத்துக்குக் கொண்டுவந்தவர் சேர் ஸ்மித்.

நியூஸிலாந்து தேசத்தவரான அவர் பிரிட்டன் எடின்பேர்க் பல்கலைக்கழகத்தில் மருத்துவவியல் பேராசிரியராகவும், பீடத்தலைவராகவும், பிரதி உபவேந்தராகவும் பணியாற்றியவர்.

உலக சுகாதார ஸ்தாபனம் முதல் பல்வேறு அமைப்புகளில் மருத்துவவியல் நிபுணராக இருந்து பல ஆய்வுகளை மேற்கொண்டவர்.

உலகின் பல்வேறு நீதிமன்றங்களில் சட்ட மருத்துவவியல் தொடர்பாக அவர் அளித்த சாட்சியங்கள் நீதியைச் செவ்வனே நிலைநிறுத்த உதவியதோடு, பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தின.

புரியாத மர்மங்களை தமது மருத்துவவியல் ஆற்றலினால் அவர் புரியவைத்தபோது மருத்துவ மேதைகளும் சட்டவல்லுநர்களும் மூக்கில் விரலை வைத்துப் பிரமித்தனர்.

அவ்வாறான வழக்குகள் சிலவற்றை சஞ்சீவி வாசகர்கள் இப்பகுதியில் சுவைத்து ரசிக்கலாம்.

முதலாவது வழக்கு இலங்கையில் நடந்தது.

ஒரு தமிழ்மகனைக் கொலைக் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க அவர் அளித்த நிபுணத்துவ சாட்சியம் பெரிதும் உதவின.

# உண்மையான கொலைஞனைக் கண்டுபிடிக்க உதவியது எது?

சதாசிவம்—

இலங்கையின் கிரிக்கெட் சரித்திரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய தமிழ்வீரன்.

இலங்கையின் தேசிய கிரிக்கெட் அணிக்குத் தலைமை வகித்து, ஆயிரக்கணக்கான ரசிகர்களை வரித்துக்கொண்டவன்.

பின்னுளில் மலேஷியாவின் தேசிய கிரிக்கெட் அணிக்கும் தலைமை வகித்து, உலகில் இரண்டு நாடுகளின் தேசிய கிரிக்கெட் அணிகளுக்குத் தலைமை வகித்த ஒரே வீரன் என்ற பெயரைத் தட்டிச்செல்லப் போகும் ஒரு 'கிரிக்கெற்றர்'.

அழகான பெண் ஒருத்தியை 1940ஆம் ஆண்டில் திருமணம் செய்தவர் சதாசிவம். கொலை 'சம்பவம்' நடந்த போது நான்கு குழந்தைகளுக்குத் தந்தை.

முழுநேரமும் கிரிக்கெட் விளையாட்டில் மூழ்கி-தன் வயதைஒத்த பெண்களுடன் பழகி-உல்லாச உலகில் உலவி-இன்பவாழ்க்கைவாழ்ந்து வந்த சதாசிவத்திற்கு திருமண வாழ்க்கை சுமார் 10 வருடங்களில் கசக்க ஆரம்பித்தது.

அவருக்கும் அவரது மனைவிக்கும் இடையில் அன்னியோன்னியம் குறைந்து பிளவுகள், பிணக்குகள் அதிகரித்தன.

தனது கணவனை விவாகரத்துச் செய்வது என திருமதி சதாசிவம் முடிவு செய்தார்.

விளையாட்டு மனப்பான்மை மிக்க வீரர் சதாசிவம். புரிந்துணர்வு அடிப்படையில் அதற்கு இணக்கம் தெரிவித்தார்.

விவாகரத்து வழக்கு நீதிமன்றத்திற்கு வந்த போது சதாசிவம் கிரிக்கெட் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றிருந்தார்.

1951ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி அவர் நாடு திரும்பியபோது விவாகரத்து வழக்கு விசாரணையை எதிர்நோக்கியிருந்தார்.

எனினும் நாடு திரும்பிய கணவரைத் தன்னுடன் தங்குவதற்கு அனுமதித்தார் மனைவி. கொழும்பு அல்போன்ஸ் பிளேஸில், அமைதியான சூழலில் இருந்தது அவர்களது வீடு.

சுமார் இருவார காலம் மனைவியின் வீட்டில் தங்கியிருந்த சதாசிவம், மனைவியின் வற்புறுத்தலையடுத்து கொழும்பில் உள்ள தனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குத் தனது 'ஜாகையை' மாற்றிக் கொண்டார்.

## சதாசிவம் கொலை வழக்கு

இந்தச் சந்தர்ப்பத்தில் சதாசிவம் வேறு பல பெண்களுடனும் தொடர்புவைத்திருந்தார்என்று குற்றம் சுமத்தப்பட்டது.

சதாசிவம் தனது நண்பனின் வீட்டில் தங்கி இருந்தபோது விவாகரத்துத் தொடர்பாக, அவரது மனைவி சார்பான நீதிமன்ற அழைப்பாணை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அன்றிரவு திரு. சதாசிவம் தனது மனைவியின் வீட்டுக்கு வந்தார்.



சிட்னி ஸ்மித்

மனைவியுடன் இரவைக் கழித்தார்.

அவர்களது வீட்டில் அவ்வேளையில் சதாசிவம் தம்பதியர், அவர்களது நான்கு குழந்தைகள் ஆகியோருடன் வயது போன ஆயா ஒருத்தியும், 18 வயது வேலைக்காரன் வில்லியமும் தங்கியிருந்தனர்.

நீண்டகாலமாக வேலை செய்து வரும் ஆயா, குடும்பத்தவர்களுக்கு மிகவும் நம்பிக்கை உடையவராக இருந்தார்.

ஆனால் வேலைக்காரன் வில்லியம் ஒருவாரத்திற்கு முன்னர் தான் வேலைக்கு வந்தவன். எந்தவித விசாரிப்பும் இன்றி அவனை வேலைக்கு அமர்த்தியிருந்தார் திருமதி சதாசிவம்.

அடுத்தநாள் காலையில் சதாசிவத்தின் மூத்த இரண்டு குழந்தைகளும் காலை உணவை அருந்திவிட்டுப் பாடசாலைக்குப் புறப்பட்டனர். ஆயா அவர்களை அழைத்துக் கொண்டு சென்றார்.

அந்த வேளையில் திரு. சதாசிவம் தனது அறையில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்.

திருமதி. சதாசிவம் தனது இளைய குழந்தையின் அறையில் அன்றைய தினசரியில் மூழ்கியிருந்தார்.

வீட்டில் இருந்த மற்றைய நபரான வேலைக்காரன் வில்லியம் அவ்வேளை சமையற்கட்டில் இருந்தான்.

சரியாக பிற்பகல் மூன்று மணிக்கு ஆயா இரண்டு குழந்தைகளுடனும் வீட்டுக்குத் திரும்பியபோது சதாசிவமோ அல்லது வேலைக்காரன் வில்லியமோ வீட்டில் இருக்கவில்லை.

கடைக்குட்டிகள் இரண்டும் சமையலறைக்குள் விளையாடிக்கொண்டிருந்தனர்.

அதற்குப் பக்கத்தே இருந்த கராஜில் திருமதி சதாசிவம் இறந்து கிடந்தார்.

பொலீஸிற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பொலீஸார் சுறுசுறுப்பாக இயங்கினர்.

மாலை ஐந்து மணிக்குத் தனது நண்பரின் வீட்டில் தங்கியிருந்த சதாசிவம் கைதுசெய்யப்பட்டார்.

ஒருமணிநேரம் கழித்து சட்டமருத்துவ அதிகாரி பேராசிரியர் ஜி. எஸ். டபிள்யூ டி சேரம் சடலம் கிடந்த இடத்தில் ஆரம்பப் பரிசோதனைகளை மேற்கொண்டார்.

அடுத்தநாள் காலையில் பிரேத பரிசோதனை அவரால் செய்யப்பட்டது.

பேராசிரியர் டி சேரம் மருத்துவமேதை சேர் சிட்னி ஸ்மித்தின் மாணவர் என்பதும், டி சேரம்

## சட்டத்துறையில் மருத்துவ இயல்

மீது சேர் சிட்னி மிகுந்த மரியாதை வைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

திருமதி. சதாசிவம் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என டி சேரத்தின் பிரேத பரிசோதனை அறிக்கை கூறியது.

பொலீஸார் விசாரணையை முடுக்கி விட்டனர்.

சதாசிவம் தம்பதியர்களுக்கிடையில் நிலவி வந்த பிணக்குகள் —

சதாசிவத்தின் நடத்தை குறித்து திருமதி சதாசிவம் அடிக்கடி தெரிவித்து வந்த கண்டனங்கள், நிலைமை பொறுக்காமல் திருமதி சதாசிவம், தனது கணவரின் விருப்பத்தையும் மீறி விவாகரத்து வரை சென்றமை. - காரணமாகத் திரு. சதாசிவம் மிகவும் கோபமுற்றிருந்தார் என்பது பொதுவாக நிலவி வந்த அபிப்பிராயம்—

சம்பவ தினத்திற்கு முதல் நாள்தான் திருமதி சதாசிவம் சார்பான விவாகரத்து நோட்டீஸ் சதாசிவத்திடம் ஒப்படைக்கப்பட்டமை —

- ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட பொலீஸார் தமக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் வழக்கைச் சோடித்தனர்.

சதாசிவத்திற்கு எதிராக பொலீஸ் தரப்பு வழக்குத் தயாரானது.

இவ்வேளையில்தான் — கொலைச் சம்பவம் நடந்து சரியாக பத்து நாட்களின் பின் — மலையகத்தில் வைத்து, வீட்டு வேலைக்காரன் வில்லியம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டான்.

எனினும் ஏற்கனவே சதாசிவத்திற்கு எதிராகத் தாம் உருவாக்கிய வழக்கு குழம்பிப்போய் விடாமல், அதற்கு இயைந்ததாக வில்லியத்தின் வாக்கு மூலத்தைப் பொலீஸார் தயாரித்தனர்.

மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் ஆரம்ப விசாரணைகளின் போது சதாசிவத்துடன் இரண்டாவது எதிரியாக ஆஜர் செய்யப்பட்ட வில்லியம் -

உயர் நீதிமன்றத்தில் நடந்த கொலைவழக்கு விசாரணையின் போது அரச தரப்பு சாட்சியாக அரச தரப்பினரால் ஆஜர்செய்யப்பட்டான்.

எஜமானர் சதாசிவம் அவரது மனைவியைக் கொலை செய்வதற்கு தான் உதவி செய்ததாக ''ஒப்புதல்வாக்குமூலம்'' ஒன்றை நீதிமன்றத்தில் வழங்குவதற்கு வில்லியம் முன் வந்தான்.

இதனால் அரசதரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க, வில்லியத்தை நீதிமன்றம் அரசதரப்பு சாட்சியாக ஏற்று அவனுக்கு மன்னிப்பளித்தது.

திரு. சதாசிவம் அவரது மனைவியைக் கொலை செய்ததைக் கண்ணால் கண்டதாகவும் —

அதற்கு தான் உதவி புரிந்ததாகவும் கூறும் வீட்டு வேலைக்காரன் வில்லியத்தை வலுவான சாட்சியாக வைத்துக் கொண்டு அரச தரப்பு வழக்கை ஆரம்பித்தது.

1951அக்டோபர் 9ஆம் திகதியன்று காலை 9. 30 மணிக்கு முன்னர் தனது மனைவியைக் கொலை செய்ததாக திரு சதாசிவம் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

நீதியரசர் கிறேஷியன் முன் வழக்கு விசாரணை ஆரம்பமான போது கொழும்பில் பொது சன அபிப்பிராயம் சதாசிவத்திற்கு எதிராகவே இருந்தது.

சதாசிவம்தான் கொலையைச் செய்திருப்பார் என்றும் —

நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டு அவர் தண்டனைக்கு உள்ளாகப்போவது நிச்சயம் என்றும் பலரும் நம்பினர்.

ஆனால் பிரேத பரிசோதனை அறிக்கை சில சந்தேகங்களைக் கிளப்பப் போகின்றது என்றோ —

அல்லது அந்த சந்தேகங்களுக்கு தகுந்த விளக்கங்களைக் காட்டி உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டுவர ஒரு மருத்துவமேதை நீதிமன்றத்திற்கு வரப்போகின்றார் என்றோ யாரும் எதிர் பார்த்திருக்கவில்லை.

மிகுந்த நம்பிக்கையுடன் அரச தரப்புச் சட்டத்தரணி வழக்கு விசாரணையைத் தொடங்கினர்.

(தொடரும்)

- தமிழில்: வித்தி -

# சோலில் நடைபெறவுள்ள 26ஆவது ஒலிம்பிக் விழா

உலகின் மிகப் பெரிய விளையாட்டுவிழாவான 24ஆவது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற இன்னும் 14 மாதங்கள் உள்ளன.

1972மியூனிச்சில் நடைபெற்ற ஒலிம்பிக் விழாவின் பின்னர் அதிக தொகையான விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படும் இந்த 24ஆவது ஒலிம்பிக்விழா தென் கொரிய தலைநகரான சோலில் அடுத்த வருடம் செப்டெம்பரில் நடைபெறவுள்ளது.

நீண்ட கால இடைவெளியின் பின் அரசியல் காரணங்களுக்காக ஒவ்வொரு போட்டிகளையும் மாறி மாறி பகிஷ்கரித்து வந்த நாடுகள் எல்லாம் இந்தப் போட்டியில் மோதத் தயாராகியுள்ளன.

நாடுகள் தயார், விளையாட்டு வீரர்கள் தயார், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தயார். ஆனால் தென் கொரிய தலைநகர் சோல் தயாரா என்பது தான் அண்மையில் பெரிதாக எழுந்துள்ள கேள்வி.

சோலில் ஒலிம்பிக் விழா நடைபெறப் பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்து ஒலிம்பிக் நகர நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்பட்ட பின் தான் அங்கு அரசியல் நெருக்கடி தலைதூக்கியுள்ளது.

கடந்த சில வாரங்களாக தென் கொரியாவில் நிலவி வரும் சீரற்ற அரசியல் நிலைமை அங்கு அடுத்த வருடம் ஒரு பெரிய விளையாட்டுப் போட்டியை நடத்த முடியுமா என்ற ஐயத்தைத் தோற்றுவித்துள்ளது. இது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டிக்கு ஒரு சங்கடத்தை உண்டாக்கியுள்ளது.

ஆனால் போட்டிகளை எங்காவது எப்படியும் நடத்துவது என முடிவு கட்டியுள்ளனர். இதற்கு முன் ஒலிம்பிக் போட்டிகள் 1984 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்றது. இம்முறை மீண்டும் லொஸ் ஏஞ்சல்ஸின் உதவியை நாடியுள்ளது ஒலிம்பிக் கமிட்டி.

லொஸ் ஏஞ்சல்ஸ் மேயர் திரு. பிராட்லி இடம் ஒலிம்பிக் கமிட்டி ஒரு குறுகியகால அவகாசத்தில் உங்களால் ஒலிம்பிக் போட்டியை அங்கு நடத்த முடியுமா என்று கேட்டுள்ளது. அதற்கு பிராட்லி தங்களிடம் போட்டிகளை நடத்தக் கூடிய வசதிகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதே வேளை இந்த வார ஆரம்பத்தில் தென் கொரியாவில் ஏற்பட்டுள்ள சில அரசியல் திருப்பங்களால் நிலைமை

## வடமராட் ...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

அண்மையில் கைதாகி பூஸா கொண்டுசெல்லப்பட்டு அங்கு எத்தனையோ சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள்' என்றார்.

அவர்கள் கைதாகி விடுதலையானதற்கு எதுவித அத்தாட்சிப் பத்திரமும் இன்னும் கிடைக்காததால் அவர்கள் மிகவும் பீதியுடன் இருப்பதாகவும் கூறினர்.

அந்த இளைஞர்களுக்கு இந்திய பிரதிநிதிகள் ஆறுதல் கூறினர். இதைவிட என்னதான் அவர்களால் செய்ய முடியும்?

நேரம் ஐந்துமணியை நெருங்கிக்கொண்டிருந்தது. இந்திய பிரதிநிதிகளுக்கும் எமது உள்ளுர் அதிகாரிகளுக்கும் இராணுவம் வழங்கிய

திய பிரதிநிதி அகதி முகாமில் உள்ளவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

'பயப்படாதீர்கள், உங்களுக்கு மிக விரைவில் பாதுகாப்பும் சுதந்திரமும் கிடைக்கும், ஒன்றும் யோசியாதீர்கள். நாங்கள் போய் வருகின்றோம்'. என விடைபெற்றார்.

எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுவிட்டோம்.

இந்தியப் பிரதிநிதி கடைசியாகக் கூறிய பொன்னான வார்த்தைகளைக்கேட்டதும் எங்களுக்கு ஒருவித தெம்பு வந்துவிட்டது.

சுதந்திரம் கிடைத்துவிட்டது போன்ற ஓர் உணர்வில் வெகு உல்லாசமாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தோம்.

எங்களது மினிவானும்

தற்செயலாகப் போட்டிகள் சோலில் நடைபெறுமல் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்றாலும் ரஷ்ய சார்பு நாடுகள் அதை அமெரிக்காவில் நடைபெறும் போட்டி என்று பகிஷ்கரிக்காமல் தென்கொரியாவில் நடைபெறும் போட்டியாகக் கருதிக் கலந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் விளையாட்டு ரசிகர்கள் ஒரு பூரணமான போட்டியைக்

## விளையாட்டுத் துறை

கண்டு களிக்க முடியும்.

**டென்னிஸ்**

விம்பிள்டன் டென்னிஸ் போட்டி கடந்த வாரம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.

கடந்த இரண்டு வருடங்களாகச் சாம்பியனாக

--ஈசன்--

வந்து உலகின் முதலாம் தரத்தில் கணிக்கப்படும் மேற்கு ஜெர்மனியின் பெரிஸ் பேக்கர் தன்னுடைய ஆட்டத்தை ஆஸ்திரேலிய புதுமுகம் ஒருவரிடம் கோட்டைவிட்டுள்ளார்.

பெரிஸ் பேக்கரைத் தோற்கடித்தவர் டெனிஸ் வீரர் பட்டியலில் 68ஆம் தரத்தில் கணிக்கப்படும் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பீற்றர் டொகான்.

தற்போதைய ஆட்ட நிலையின்படி சாம்பியனாகும் வாய்ப்பு முன்னுள் சாம்பியன்களில் ஒருவரான ஜிம்மி கொனர்ஸ் பக்கம் திரும்பும் வாய்ப்பும் உள்ளது.

[illegible] பம் அதிகமாக உள்ளது.

**கிரிக்கெட்**

திகதி இங்கிலாந்தில் நடைபெற்றது.

தென் ஆபிரிக்காவுடன் விளையாட்டுத் தொடர்புடையவர்களை இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட அனுமதிப்பதுபற்றி மேற்கு இந்தியா கொண்டு வந்த தீர்மானம் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இந்தத் தீர்மானம் வாக்களிப்புக்குச் செல்வதைத் தடுப்பதற்காக இந்த விடயம் சம்பந்தமாக ஆராய்வதற்கு உபகுழு ஒன்றை நியமித்துள்ளனர். இந்த உபகுழுவின் தலைவர் இங்கிலாந்தின் கொலின் கவுட்றி. இந்த உபகுழு மேற்படி தீர்மானம் சம்பந்தமாக ஆராய்ந்து தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது.

ஆனால் இந்தியாவில் உலக கிண்ணப் போட்டிகள் இவ்வருட இறுதியில் நடைபெற உள்ளன. ஆகையால் இந்த உலகக் கிண்ணப் போட்டியில் தென் ஆபிரிக்காவுடன் விளையாட்டுத் தொடர்பு உடையவர்களும் கலந்து கொள்ள வாய்ப்பு உண்டாகியுள்ளது. ★

## கடையிற்---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கடையிற்சுவாமி முதலியோர்க்குச் சின்முத்திரை காட்டிய தென் முகப்பரமாசாரியத் திருக்கோலமாகிய தட்சணாமூர்த்தியின் திருச்சந்நிதானம் ஏற்பட்டி [illegible] வரப்பிரசாதமாகும். [illegible] விரும்பும் சிவயோகர்களுக்கும் சிவஞானிகளுக்கும் குருவரு

# இலகுநடையில் உருவான சித்தாந்த விளக்கம்

சஞ்சீவி

நூல் வரிசை

''சித்தாந்த சாஸ்திரம் முப்பொருளின் உண்மையை எடுத்தியம்புகின்றது. பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களும் மெய்ஞ்ஞானிகளால் மக்கள் உய்யும் பொருட்டு உலகத்துக்கு அநுக்கிரகிக்கப்பட்ட அருட் செல்வங்களாம். பன்னிரு திருமுறைகளும் பரம்பொருள் உள்நின்று உணர்த்தத் திருவாய் மலர்ந்தருளப்பட்டன. ஒன்று சாஸ்திரமாகும்; மற்றது தோத்திரமாகும். இவ்விரண்டும் சைவசமயத்துக்கு இரு கண்கள் போன்றன. சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சைவ சமயத்தவர் சித்தாந்த சாஸ்திரங்களையும் திருமுறைகளையும் நன்றாகப் பயிலவேண்டும். இந்நூல்களை எக்காலத்துக்கும் நிலைக்கும் உண்மையை விளக்கி இருக்கின்றமையால் அவைகளைக் கற்றுக் கேட்டுத் தெளிவடைதல் இன்றியமையாதனவாகும்''

'முப்பொருள் உண்மை விளக்கம்' என்ற நூலின் ஆசிரியர், தமது நூல் முன்னுரையிலே தோற்றுவாயாகத் தந்துள்ள இப்பந்தி, சைவ சித்தாந்த சாத்திர தோத்திரப் பரப்பையும் அவற்றைச் சைவ சித்தாந்த நெறி ஒழுகுபவர்

ஆயின், அவசரயுகமான இவ்விருபதாம் நூற்றுண்டிலே இந்தப் பெரும் பரவையை நீந்திக்கடப்பதோ,மூழ்கி முத்தெடுப்பதோ எல்லார்க்கும் இயல்வதன்று. இவ்வுண்மையையும் உணர்ந்த காரணத்தினுலேயே, சைவ சித்தாந்த சாத்திர தோத்திர நூல்களை வரன்முறையாகக் கற்றும் கேட்டும் தெளிந்த அறிவுபெற்ற ஆசிரியர், யாவர்க்கும் எளிதில் விளங்கும் வகையிலே ஆற்றெழுக்கான உரை நடையில் 'முப்பொருள் உண்மை விளக்கம்'என்ற இந்நூலை ஆக்கித்தந்துள்ளார்.

அறிவியல், சாஸ்திரவியல், அனுபவியல் என்ற முப்பெரும் பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவும் பப்பத்துக் கட்டுரைகள் கொண்டதாக 'முப்பொருள் உண்மைவிளக்கம்' ஆக்கப்பட்டுள்ளது. அறிவியற் பகுதியிலே சைவ ஒழுக்கநெறிகள் விரித்துக் கூறப்படுகின்றன. சாஸ்திரவியலிலே சைவ சித்தாந்த மெய்யியல் விளக்கமும் கோட்பாடுகளும் தரப்படுகின்றன. அநுபவவியலிலே சைவசித்தாந்த சாதனைகள்மூலம் அடை[illegible]

நூல்: முப்பொருள் உண்மை விளக்கம்
ஆசிரியர்: மு. இளையதம்பி B.A (Lond)
அறிமுகம் சொக்கன்
விலை ரூபா:32.00

கின்றது. இந்த ஒழுங்கு முறைமையால் சைவசித்தாந்தம் தொடர்பான எல்லா அம்சங்களும் தெளிவாகப்புலப்படுத்துகின்றது.

''உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கும் சைவ சித்தாந்தத்தைப்பற்றி அறிந்துகொள்ள ஆர்வமுள்ள சிவநெறியாளர்களுக்கும் தேவைப்படுகின்ற'' நூல் 'முப்பொருள் உண்மை விளக்கம்' என்பதற்கு ஐயம் இல்லை.

ஆங்காங்கு காணப்படும் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மாதர் சிறப்பிதழ்

★ மில்க்வைற் செய்தி 139
வெளிவந்து விட்டது

10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 மில்க்வைற் பார்சோப் அல்லது
2 சுப்ப மில்க்வைற்சோப் மேலுறைகளை
அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

04 - 07 - 1987 சனிக்கிழமை

ஓம் முருகா

'' உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே''

10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 பார் சோப் அல்லது
2 சுப்பமில்க்வைற் சோப் மேலுறைகளை
அனுப்பி அழகிய முருகன் ஸ்ரிக்கர்
ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## எதிர்க்கட்சிகளின் கிளர்ச்சிக்கு

# தென்கொரிய அரசு பணிந்தது

வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டி காரணமாக இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலகில் மூன்று நாடுகள் துண்டாடப்பட்டன.

ஜேர்மனி, வியட்நாம், கொரியா ஆகியவையே இந்த மூன்று நாடுகளும் ஆகும்.

இதில் வியட்நாம் இன்று மீண்டும் ஒரே நாடாக மாற்றப்பட்டு விட்டது.

1975 ஆம் ஆண்டு நூயன் வான் தியூவின் அமெரிக்க ஆதரவு அரசு தென்வியட்நாமில் கவிழ்க்கப்பட்டதை அடுத்து தென் வியட்நாமும் வட வியட்நாமும் இணைந்து ஒரே நாடாகின.

சர்வதேச அரங்கில் அமெரிக்கச் செல்வாக்கு அப்போது மழுங்கிப் போனதுக்கு வியட்நாமில் அதன் இராணுவத் தலையீடும் படுதோல்வியுமே காரணமாக இருந்தன.

துண்டாடப்பட்ட நாடுகளில் மற்றொன்று ஜேர்மனி. மற்றோர் உலக மகாயுத்தம் வரை இது இணையும் என்ற பேச்சுக்கே இடம் இல்லை.

துண்டாடப்பட்ட மூன்றாவது நாடு கொரியா.

**கொரிய யுத்தம்**

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் நடந்த பெரிய யுத்தமான கொரிய யுத்தத்தின் போது வட கொரியா — தென் கொரியா என்று கொரியா துண்டாடப்பட்டது.

வட கொரியா சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் நாடாகவும் தென் கொரியா அமெரிக்க சார்பு நாடாகவும் அன்றிலிருந்து இயங்கி வருகின்றன.

வட கொரியாவின் படை எடுப்பைத் தடுக்கு முகமாக தென் கொரியாவில் அமெரிக்கா 70ஆயிரம் படைகளை இன்னும் குவித்து வைத்திருக்கிறது.

**மீண்டும் சலசலப்பு**

வியட்நாம் யுத்தம் முடிவடைந்து 12 வருடங்களின் பின்னர் தற்போது தென்கொரியாவில் மீண்டும் சலசலப்பு ஆரம்பமாகி இருக்கிறது.

இந்தச் சலசலப்பு அமெரிக்க எதிர்ப்புச் சக்தியாகிமாறி தென்வியட்நாமுக்கு ஏற்பட்ட கதி உருவாவதற்கு முன், அமெரிக்கா முந்திக் கொண்டு விட்டது போன்றே தெரிகிறது.

ஜனாதிபதி சுன்டூவானுக்கு ஆதரவாக மேலும் படைகளை அனுப்பிஅரச விரோத சக்திகளை முறியடிப்பதற்குப் பதிலாக றேகன் நிர்வாகம் புதிய அணுகுமுறை ஒன்றைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது.

பெரும்பான்மை மக்களின் ஆதரவை இழந்த தாகக் கருதப்படும் சுன்டூவான் அரசுக்குப் பதிலாக மாற்றுஅரசுபதவிக்கு வருவதற்கு உதவி செய்துதனது முழு ஆதரவையும் அந்த அரசுக்கு வழங்குவதே அமெரிக்காவின் திட்டம்.

பிலிப்பீன்ஸில் பேர்டினன்ட் மார்க்கோஸ் ஆதரவு இழந்தபோது திருமதி அக்கியூனோவுக்கு தனது முழு ஆதரவையும் வழங்கி வருவதும் இதே கொள்கையின் அடிப்படையிலேயே தான்.

ஜூன் 10ஆம் திகதி எந்தெந்தக் கோரிக்கைகளை முன்வைத்து எதிர்க்கட்சிகள் போராட்டங்களை ஆரம்பித்தனவோ அத்தனை கோரிக்கைகளையும் வழங்கப்போவதாக ஜனாதிபதி சுன்டூவான் அறிவித்துள்ளார். இது தென்கொரியாவை மட்டும் அல்ல முழு உலகையுமே ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது.

★ ஜனாதிபதியை மக்கள் நேரடியாக வாக்குகள் மூலம் தெரிவுசெய்ய வாய்ப்பு அளிப்பது.

★ தென்கொரியாவின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரும் அதிருப்தியாளருமான கிம்டா ஜங்குக்கு மன்னிப்பு வழங்குவது.

★ அரசியல் கைதிகளை விடுதலை செய்வது.

★ பத்திரிகைச் சுதந்திரத்துக்கு உத்தரவாதம் வழங்குவது.

★ மனித உரிமைகளைப் பேணுவது.

இவையே ஜனாதிபதி சுன்டூவான் டெலிவிஷனில் தோன்றி அறிவித்த சீர்திருத்தங்கள் ஆகும்.

1980 ஆண்டு சுன்டூவான் இராணுவப் புரட்சி மூலம் தென் கொரியாவில் பதவிக்கு வந்த நாள்முதல் அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைகள் தென்கொரியாவில் வலுக்க ஆரம்பித்தன.

அதன் உச்சக்கட்டமே கடந்த ஜூன் 10 ஆம் திகதி நாடளாவிய முறையில் ஆரம்பமான ஆர்ப்பாட்டங்கள்.

## மற்றொரு வியட்நாமாக மாறுவதை தடுக்கும் முயற்சியில் அமெரிக்கா

தென் கொரியாவுக்கு ஜனநாயக உரிமைகள் வழங்கப்படுவதற்கு ஆதரவாகஅமெரிக்க செனட் வாக்களித்திருந்தது.

அதே சமயம் றேகன் நிர்வாகம் அமெரிக்கத் தூதர் ஒருவரை தென் கொரியாவுக்கு அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தியது.

இவற்றைத் தொடர்ந்தே ஜனாதிபதி சுன்டூவான் புதிய அரசியல் சீர் திருத்தங்கள் பற்றி அறிவித்தார்.

இதன்படி 1988 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி தென் கொரியாவில் நடைபெறும் 13 ஆவது ஜனாதிபதித் தேர்தலில் பொதுமக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

மக்களால் தெரிவு செய்யப்பட உள்ள புதிய ஜனாதிபதி அமெரிக்காவுக்கு முழு விசுவாசமாகச் செயற்படத் தவறினாலும் அமெரிக்கா அவருக்கு தன் முழு ஆதரவையும் வழங்க வேண்டிய இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. ★

**உலக உலா**
ஏன்.பி.சீலன்

## நவீன காந்தி!




மகாத்மா காந்தியிடமிருந்து இந்தியாவிற்கு முதுசமாகக் கிடைத்த அரசியல் ஆஸ்தி வன்செயல் பாதை அல்ல - ஜே. ஆர். ஜே.

நன்றி: HINDU

## திருக்கல்யாணத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 4

யாழ்ப்பாணம் நல்லூர் கைலாய பிள்ளையார் கோயிலில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு திருக்கல்யாணத் திருவிழா நடைபெறுகிறது.

மாலை 5 மணிக்கு விசேட பூசையும், மேளக் கச்சேரி நிகழ்ச்சிகளும் ஆலயத்தில் நடைபெறும். (உ)

## தேர்தல் கருதியே எமக்குள் உடன்பாடு

### சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 4

எமக்கிடையே கொள்கை வேறுபாடுகள் இருப்பினும் பொதுத் தேர்தல் ஒன்று உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் ஒன்றுபட்டுள்ளோம்.

— இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆறு கட்சிக் கூட்டணிக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சொன்னார்.

கடந்த வியாழனன்று கம்பல் பூங்காவில் இக் கூட்டம் நடைபெற்றது.

கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன அமைந்த கூட்டணியின் முதலாவது பொதுக்கூட்டமாக இது அமைந்தது.

## சந்தேகத்தைத் தரும் இந்திய நிவாரணம்

### பிரேமாவின் 'கழுகுக் கண்'

கொழும்பு, ஜூலை 4

வடபகுதிக்கு இந்தியா, நிவாரண உணவுப் பொருள்களை அனுப்பும் செயலை ஸ்ரீலங்கா மக்கள் சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்றனர்.

—இப்படி பிரதமர் ஆர். பிரேமதாஸசொன்னார்.

வியாழன் கதிர்காமம் கம்உதாவ நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில்பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டில் பட்டினி இல்லை. இருந்தும் இந்தியா உணவுப் பொருள்களை அனுப்புகின்றது. இது ஒரு நட்பு நாடு செய்யும் வேலையா?

இப்படி பிரதமர் கேட்டார். (உ-எ)

## காால்நடை வளாப்போர் கருத்தரங்கு

மானிப்பாய், ஜூலை 4

சுன்னாகம் அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாகவுள்ள யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் சுன்னாகம் கிளையில் கால் நடைகள் சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாக கிளைத் தலைவர் திரு. பா. சுதர்சன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் வைக்கோலுடன் யூரியா கலந்து வைப்பதன் மூலம் மாடுகளுக்கு எப்படி போஷாக்குத் தன்மையைக் கூட்டலாம் என்பது பற்றி செயல் முறை விளக்கம் அளிக்கப்படும்.

டாக்டர் திருமதி சுமனாதேவி தனபாலசிங்கம், டாக்டர் ரி. வருணசிங்கம் ஆகியோர் செயல்முறை விளக்கம் அளிப்பர். (உ-90)

## பரீட்சைகளை.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குத் தோற்றவேண்டும் என மற்றொரு சாராரும் வாதிட்டனர்.

இறுதியில் மத்தியஸ்தர்களால் ஓர் அமைப்புக் குழு நியமிக்கப்பட்டது.

அக்குழுவில் மாணவர் பிரதிநிதிகள், ஆசிரியர் பிரதிநிதிகள், அதிபர்கள் போராட்டக்குழுப் பிரதிநிதிகள், பெற்றோர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அக்குழுவுடன் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் நடத்திய ஆலோசனையைத் தொடர்ந்து பரீட்சைக்குத் தோற்றுவது என தீர்மானிக்கப் பட்டது.

இதேவேளை மாணவர்கள் முன்வைத்த 5 அம்ச கோரிக்கைகளுக்காக தொடர்ந்து சகலரும் போராடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## கூட்டம் ஒத்திவைப்பு

அச்சுவேலி, ஜூலை4

இன்று நடைபெற இருந்த அச்சுவேலி பிரசைகள்குழுவின்பொதுக் கூட்டம் ஒத்தி வைக்கப் பட்டிருப்பதாக அறிவிக் கப்பட்டிருக்கிறது. (உ-11)

## நாதஸ்வர --

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

திறந்து விட்டிருப்பது அதன் சரித்திரத்திலேயே இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய விழா ஓராண்டு காலத்துக்கு ரஷ்யாவில் ஆயிரம் நகரங்களில் நடத்தப்படும். (உ-எ)

## மதவெறி- --

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

முகாம்களில் இருக்கிறார்கள்.

இந்த நிலை நீங்கவேண்டும். சர்வ மதங்களுக்கும் மதிப்பளித்து அவற்றின் வழிபாட்டுத் தலங்களில் கை வைப்பதை அரசும் படைகளும் நிறுத்த வேண்டும்.

மத சுதந்திரம் அடிப்படை மனித உரிமை. அதனை ஒருவரிடம் இருந்து மற்றவர் பறித்துக்கொள்ள அதிகாரம் இல்லை. மத உணர்வு வெறியாக மாற இடந்தரலாகாது.

## இந்தியா---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்படுத்தப்பட்டவை.

இந்த நெருக்கடிகளை இந்தியா சமாளித்து விடும். இப்பயமுறுத்தல்களை சமாளித்து வெற்றி காணும் திறமை, ஒற்றுமையும் இந்திய மக்களுக்கும் அரசுக்கும் உண்டு.

-இப்படி அவர் சொன்னார். (உ-எ)

## துறை புக---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

இக்கப்பல் உள்ளே நங்கூரமிட அனுமதிக்கப் படவில்லை.

இதனடையில், சென்னைத் துறைமுகத்தில் 'ஜலண்ட் பிறைட்' கப்பலில் நிவாரண உணவுப் பொருள்கள் ஏற்றும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வந்து உள்ளன. (உ-எ)

## பாடசாலை---

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சடிக்குச் சமீபமாகச் சென்று கொண்டிருந்த சமயம் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு அவர் இலக்கானார்.

இதேசமயம் தமது வீடுகளைப் பார்வையிடுவதற்காக நேற்று மாலை [illegible] பகுதிக்குச் சென்ற பொது மக்களும் படையினரால் திருப்பி விடப்பட்டதாக கூறப்படுகிறது. (உ-68)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### ஏல விற்பனை அறிவித்தல்

பழுதடைந்த பீ. வீ. சீ. வயர்கள், இரும்பு ஆணிகள் மற்றும் பாவிக்க முடியாத மின்சார, பொதுக் களஞ்சியப் பொருட்கள் 14 - 07 - 1987 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10-00 மணியளவில் நல்லூர் தீயணைக்கும் இயந்திரம் நிற்கும் வளவில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் விற்பனையாகவுள்ள பொருட்கள் 13 - 07 - 1987 ஆம் திகதி காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணிவரை நல்லூர் தீயணைக்கும் படை வளவினுள் பார்வையிடலாம்.

சித்திபெற்ற கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்திப் பொருட்களை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## பிரதேச அபிவிருத்தி அமைச்சு

### விபுலானந்தர் அடிகள் இசை நடனக்கல்லூரி

இராமகிருஷ்ணபுரம் - மட்டக்களப்பு

மட்டக்களப்பு விபுலானந்தர் அடிகள் இசை நடனக் கல்லூரியில் இசைக் கலைமாமணி/நாட்டியக் கலைமாமணி நான்காண்டு நெறியில் பயிலுவதற்கு மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அழைப்பாகின்றன.

**மாணவர் அனுமதிக்கான விதிகள்:—**

**(1) பாடநெறிகள்:—**

கீழ்க்குறிக்கப்படும் நான்காண்டுகாலப் பாடநெறிகள் நடைபெறும்.

1. வாய்ப்பாட்டு
2. வயலின்
3. வீணை
4. மிருதங்கம்
5. பரதநாட்டியம்
6. புல்லாங்குழல்.

மாணவர் ஒருவர் மேலே நிரல்படுத்தியுள்ள துறைகளில் ஒன்றையும் துணைப்பாடமாக மற்றொன்றையும் தெரிவுசெய்யவேண்டும். வாய்ப்பாட்டுத் தவிர்ந்த ஏனைய பாடங்களைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுப்பவர் வாய்ப்பாட்டினையே துணைப்பாடமாகக் கொள்ளல்வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியாது.

**(2) மாணவர் தெரிவு:—**

செய்முறைத் தேர்வு, எழுத்துத் தேர்வு ஆகியவற்றின்மூலம் மாணவர் அனுமதிக்கு தெரிவு ஆவார். தேர்வு கல்லூரியிலேயே நடைபெறும். தேர்வில் அனுமதி கிடைத்த பின்னர் தெரிவுசெய்யப்பட்ட துறையில் இருந்து மாற்றம் செய்ய முடியாது.

**(3) தகைமைகள்: —**

அ. ஒரே தடவையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தேர்வில் தமிழ்மொழி, கணிதம், சங்கீதம்/நாட்டியம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் ஒரேதடவையில் தமிழ்மொழி, கணிதம், சங்கீதம்/நாட்டியம் ஆகியவற்றை உள்ளடக்கிய எட்டுப் பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

சங்கீதம், நடனம் க.பொ.த பரீட்சையில் சித்தியடையாதவர்கள் வட இலங்கைச் சங்கீதசபைப் பரீட்சையில் மூன்றும் ஆண்டு சித்தியடைந்திருத்தல் அவசியமானது.

ஆ. வயது:—

விண்ணப்பதாரி 1987-08-31 அன்று 15 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட வயதினையுடைய இலங்கைக் குடிமகன்/குடிமகள் ஆதல் வேண்டும்.

**(4) அ. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:—**

முதல்வர்,
விபுலானந்தர் அடிகள் இசை நடனக் கல்லூரி,
கல்லடி,
மட்டக்களப்பு.

**ஆ. விண்ணப்பங்களை அனுப்பும் அஞ்சல் உறையில் இடதுபுற மேற்பக்கத்தில்**

''இசைக் கலைமாமணி''/''நாட்டியக் கலைமாமணி'' நெறிக்கு விண்ணப்பம் என்ற சொற்கள் பொறித்திருத்தல் வேண்டும்.

**இ. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதிநாள்**

1987 ஓகஸ்ட் 31ஆம் நாள்.

விண்ணப்பப்படிவங்களை விபுலானந்தர் இசைநடனக் கல்லூரி அலுவலகத்தில் ஒன்றுக்கு ரூபா 5/- செலுத்தி தபால் மூலமாகவோ, நேர்முகமாகவோ பெற்றுக்கொள்ளலாம். தனிப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ம. இராசநாயகம்,
தமிழலுவற் பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 04-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Saturday July 04, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org